# செம்மண்

நிலம் 3 துகள் 132 வள்ளுவர் ஆண்டு 2052, 28 தை - 03 மாசி 2023 வாரமலர் பக்கங்கள் 22



## ரணில் எச்சரிக்கை!

இந்த ஆட்சியால் மேற்கொள்ளப்படும் பொருளாதார மற்றும் விவசாய நிகழ்ச்சித் திட்டங்களும் பன்னாட்டு நாணய நிதியத்தின் பரிந்துரைக்கேற்ப முன்னெடுக்கப்படும் நாடுகளுடனான கடன் மறுசீரமைப்புக்கும் எந்த வகையிலாவது இடைஞ்சல் ஏற்பட்டால் நாடு மீண்டும் 2022 வைகாசி, ஆனி மாதங்களில் ஏற்பட்ட நிலையை மீண்டும் சந்திக்கும். ஒருவராலும் அதைத் தடுத்து நிறுத்த முடியாது. இவ்வாறு மிரட்டியுள்ளார் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க. அனுராதபுரத்தில் நேற்று நடந்த நிகழ்வு ஒன்றில் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பக்கம் 03

## யாழ்ப்பாணத்தில் தை மாதம் டெங்கு நோயாளர் அதிகரிப்பு

*சிறுவர்கள் பத்திரம் என மருத்துவர் யமுனாநந்தா எச்சரிக்கை*

யாழ்ப்பாணத்தில் டெங்கு நோயாளர்கள் எண்ணிக்கை இந்த ஆண்டு முதல் மாதத்தில் 50 சதவீதம் அதிகரித்துள்ளது என்று யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்தார்.

செய்தியாளர்களை நேற்றுச் சந்தித்த அவர் இந்தத் தகவலைப் பகிர்ந்துகொண்டார். இலங்கை முழுவதும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் மக்கள் கவனமாக இருக்க வேண்டும் என்று அவர் எச்சரித்தார்.

"யாழ். போதனா பக்கம் 03

## பெப். 4 போராட்டத்திற்கு ரெலோ கட்சி முழு ஆதரவு

இலங்கையின் சுதந்திர தினத்தை கறுப்பு நாளாக அறிவித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழ மாணவர்கள் நடத்த இருக்கும் போராட்டத்திற்கு தானும் முழு ஆதரவு என்று ரெலோ கட்சி அறிவித்துள்ளது.

மன்னாரில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் இதனை அறிவித்தார்.

நான்காம் திகதி இடம்பெறவுள்ள சுதந்திர தின நிகழ்விற்கெதிராக பல்கலைக்கழக மாணவர்கள் போராடுவதற்கு ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி ஆதரவு வழங்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

பெப்ரவரி 4ஆம் நாள் கொண்டாடப்படும் இலங்கையின் சுதந்திர தினத்தை கரி நாள் என அறிவித்த யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள், அன்றை தினம் தமிழ் மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் பேரணி நடத்தப்படும் என்றும் அறிவித்துள்ளார்கள்.

இந்தப் பேரணியில் கலந்துகொள்ளும்படி அவர்கள் அனைத்துத் தரப்பினருக்கும் அழைப்பு விடுத்துள்ளனர்.



## சுதந்திர தினப் போராட்டத்தில் மக்களை திரட்ட களத்தில் பல்கலை மாணவர்கள்

இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் நாளை தமிழர்களின் கரி நாள் என்று அறிவித்துள்ள யாழ்ப்பாண மற்றும் கிழக்குப் பல்கலைக்கழ மாணவர்கள், அன்றைய தினம் பெரும் மக்கள் பேரணி ஒன்றுக்கும் அழைப்பு விடுத்துள்ளனர். அனைத்துத் தரப்பினரும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு மாணவர்கள் அழைப்பு விடுத்திருந்தனர். தமது போராட்டத்துக்கு பலம் சேர்க்கும் வகையில்

பக்கம் 02

செம்மண்
வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
ஆசிரியர்: தே.பிரேமானந்த்

# தமிழ்க் கட்சிகளின் பதில்தான் என்ன?

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்திற்கு முன்பாக தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படும் என்று இரண்டு மாதங்களுக்கு முன்னர் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். அதைத் தொடர்ந்து தீர்வு காண்பதற்கான முயற்சியாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தை மூன்று தடவைகள் கூட்டி தீர்வு தொடர்பில் ஆராயப்பட்டது. அந்தக் கூட்டங்களில் எந்தத் தீர்வும் எட்டப்படவில்லை.

தீர்வு ஒன்றை எட்டுவதற்கு முன்பாக அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்குமாறு தமிழ்த் தலைவர்கள் அரச தலைவரிடம் வலியுறுத்தினார்கள். கொழும்புக்கு வந்திருந்த இந்திய அயலுறவுச் செயலர் எஸ்.ஜெய்சங்கரும் அதனையே பகிரங்கமாக வலியுறுத்தினார். தமிழ்க் கட்சிகளுடன் பேசும்போதும் 13ஐயே நடைமுறைப்படுத்தாக அரசிடம் அதற்கு மேல் கேட்டு என்ன பயன் என்றுவேறு கேள்வி எழுப்பிவிட்டுச் சென்றார்.

ஆனால், இந்தத் தடவை பேச்சுக்களுக்குச் செல்வதற்கு முன்பாக 6 தமிழ்க் கட்சிகள் இணைந்து ஒரு தீர்மானத்திற்கு வந்திருந்தன. அதில் சமஷ்டியே ஒரே தீர்வு அந்தத் தீர்வுக்குச் செல்வதற்கு முன்பாக நடைமுறைச் சாத்தியமான விடயங்களை அரசு செயற்படுத்தவேண்டும் என்று தீர்மானித்தார்கள். தமிழ் அரசுக் கட்சி, ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எவ், தமிழ்த் தேசியக் கட்சி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்ற 6 கட்சிகளுமே இந்தக் கோரிக்கையை கூட்டாக வலியுறுத்தின. இதற்கு மேலாக இரு தேசங்களின் அங்கீகாரத்தோடு சமஷ்டியே தீர்வு என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸும் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியது.

இருந்தாலும் சமஷ்டித் தீர்வுக்கு நான் தயார் இல்லை என்று கடந்த வாரம் கூட்டிய சர்வகட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார். ஒற்றையாட்சிக்குக் கீழே அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதற்கு மட்டுமேதான் தயார் என்று அவர் தெரிவித்திருக்கின்றார். அதன் மூலம் தமிழ்த் கட்சிகளின் கோரிக்கையை அவர் ஒட்டுமொத்தமாக நிராகரித்திருக்கிறார்.

இப்போது தமிழ்க் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன? 13ஆம் திருத்தத்தை திருத்தங்களுடன் ஏற்றுக்கொண்டு சமஷ்டிதான் வேண்டும் என்று அறிக்கைகள் விடப்போகின்றனவா? அப்படியில்லாவிட்டால்



### பொருளாதார நெருக்கடியால்

## மீண்டும் போராட்டங்கள் எரிமலைபோல் வெடிக்கும்

*நாடாளுமன்ற உறுப்பினர் நாலக தெரிவிப்பு*

பொருளாதார நெருக்கடியால் ஏற்படும் விளைவுகள் காரணமாக மீண்டும் மக்கள் போராட்டங்கள் விரைவில் எரிமலை போல் வெடிக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்தார். ரணில் - ராஜபக்ஷ ஆட்சியினால் பொருளாதார நெருக்கடிக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது,கடன் பெறல், இருக்கும் வளங்களை விற்றல் ஆகியவையே ஜனாதிபதியின் பொருளாதாரக் கொள்கைகளாக உள்ளன, அவற்றால் நாட்டை மீட்க முடியாது என்றார் அவர்.

சுதந்திர மக்கள் கூட்டணியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை வெளியிடும் நிகழ்வு வெள்ளிக்கிழமை பத்தரமுல்லயில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நல்லாட்சியில் நடைமுறைப்படுத்திய தவறான பொருளாதார கொள்கையையே தற்போதும் நடைமுறைப்படுத்துகிறார். நல்லாட்சியின் பொருளாதாரக் கொள்கையை 69 இலட்ச மக்கள் புறக்கணித்து 2019ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.

கோட்டாபய ராஜபக்ச ஆட்சியில் மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் பொருளாதாரக் கொள்கை செயற்படுத்தப்பட்டது. பல்வேறு நெருக்கடிக்குள்ளான மக்கள் இறுதியில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.

வரி அதிகரிப்பு, கடன் பெறல் மற்றும் மிகுதியாக இருக்கும் தேசிய வளங்களை விற்றல் ஆகியன ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பிரதான பொருளாதார கொள்கையாக உள்ளது. இந்த வரிச் சீர்திருத்தங்களினால் மக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்- என்றார்.

### சுதந்திர...

மக்களைத் திரட்டும் நடவடிக்கையில் அவர்கள் தற்போது இறங்கியுள்ளனர். மாவட்டங்கள் தோறும் சென்று மக்கள் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து போராட்டத்திற்கு ஆதரவு திரட்டி வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று இந்தச் சந்திப்புக்களில் பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபட்டனர். மத தலைவர்கள், புதுக்குடியிருப்பு சமூக செயற்பாட்டாளர் விஜி, முன்னாள் விவசாய அமைச்சர் பவன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், ஈஸ்வரி, புதுக்குடியிருப்பு பிரதேச சபை உபதவிசாளர் ஜனகமேனன் ஆகியோரை சந்தித்து போராட்டத்திற்கு ஆதரவு திரட்டினர்.

யாழ் .மறை மாவட்ட குரு முதல்வர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரையும் சந்தித்து அவர்கள் ஆதரவு திரட்டினர். பெப்ரவரி 4ஆம் நாள் வரையில் ஆதரவு திரட்டும் பணி தொடர்ச்சியாக இடம்பெறும் என்று மாணவர்கள் தெரிவித்தனர்.

# நாணய நிதியத்தின் கடனைப் பெற சீனாவின் கால அவகாசம் போதாது

பன்னாட்டு நாணய நிதியத்தின் கடன் உதவியை இலங்கை பெறுவதற்கு, சீனா வழங்கியிருக்கும் கடன் மீள் செலுத்துகைக்கான 2 வருட கால அவகாசம் போதுமானதாக இல்லை என்று இராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன.
நாணய நிதியத்திடம் இருந்து அவசரமாக 2.9 பில்லியன் டொலர்களைக் கடனாகப் பெறுவதற்கு இலங்கை முயற்சித்து வருகின்றது. அது தொடர்பான அதிகாரிகள் மட்டப் பேச்சுக்கள் நடத்தப்பட்டு இணக்கம் எட்டப்பட்டுள்ளது. எனினும் அந்தக் கடனைப் பெறுவதற்கு முன்னர், இலங்கை ஏற்கனவே கடன் வாங்கியுள்ள நாடுகள் மற்றும் வங்கிகளுடன் அது தனது கடன் மீள் செலுத்கையை மறு வரையறை செய்ய வேண்டும் என்று நிதியம் வலியுறுத்துகின்றது.
பன்னாட்டு வங்களுக்கு வெளியே இந்தியா, சீனா, ஜப்பான ஆகிய நாடுகளிடமிருந்தும் பெரும் தொகை நிதியை இலங்கை கடனாகப் பெற்றுள்ளது. இந்தக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான ஒழுங்குகளை மறுசீரமைக்காமல் நாணய நிதியத்தின் கடனைப் பெற்றுக்கொள்ள முடியாது. இதனால் இந்த நாடுகளுடன் இலங்கை பேச்சு நடத்தி வந்தது.
கடன் மறுசீரமைப்புக்கு முழுமையாக ஒத்தழைத்து பன்னாட்டு நாணய நிதியத்தின் நிகழ்ச்சி நிரலின்படி ஒழுகுவோம் என்கிற உத்தரவாதத்தை இந்தியா நாயண நிதியதிடம் வழங்கியுள்ளது. ஜப்பானும் அத்தகைய உத்தரவாதத்தை வழங்கியுள்ளது. சீனாவிடம் பெற்ற கடன்களை 2 வருடங்களுக்குச் செலுத்த வேண்டியதில்லை என்று எக்ஸிம் வங்கி அண்மையில் நிதி அமைச்சர் என்கிற வகையில் அரச தலைவருக்கு அறிவித்திருந்தது.
ஆனால், சீனாவின் இந்த உதவி மட்டும் நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்குப் போதுமானதில்லை என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சீனாவின் இந்த சலுகையால் நாணய நிதியம் திருப்தியடையவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.
இலங்கை பொருளாதார ரீதியாக மீண்டெழவேண்டுமானால், 10 முதல் 15 ஆண்டுகளுக்கு கடன் மீள்செலுத்துகையீருந்து விலக்களிக்கப்படவேண்டும் என்று பரிஸ் கிளப்பின் அறிக்கை தெரிவித்துள்ளது.

---

## யாழ்ப்பாணத்தில்...

வைத்தியசாலையிலும் 2023 ஆம் ஆண்டு தை மாதம் கண்டறியப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 300 ஆக காணப்படுகின்றது. இதில் 33சத வீதமானவர்கள் சிறுவர்களாக காணப்படுகின்றார்கள்.
2022 ஆம் ஆண்டு தை மாதம் 200 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டிருந்தார்கள் கடந்த வருட தை மாதத்துடன் ஒப்பிடும்போது இவ்வருடம் 50% அதிகமாக காணப்படுகின்றது எனவே டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வை செய்யாவிட்டால் இந்த வருடம் சுமார் 2000 டெங்கு நோயாளர்களை வைத்தியசாலையில் சேர்க்கப்பட சாத்தியமுண்டு.
டெங்கு நோய் அதிகம் பாதிப்பது சிறுவர்களையே எனவே சிறுவர்களுடைய பெற்றோர்கள் இதில் கவனம் எடுக்க வேண்டும். குறிப்பாக 15 வயது க்குட்பட்டவர்களை மிகவும் கடுமையாக பாதிக்கின்றது. அடுத்ததாக வயது முதிர்ந்தவர்களை பாதிக்கின்றது. அடுத்ததாக உடற்பருமன் உடையவர்கள், நீரிழிவு நோயுடையவர்கள் அஸ்மா நோயுடையவர்களையும் பாதிக்கின்றது
வீதிகளில் கழிவுகள் காணப்படுதல் மிக முக்கியமான பிரச்சனை 90 வீதமான மக்கள் வீதிகளில் கழிவுகளை வீசும்போது அதில் நுளம்பு பெருகும் ஏதுநிலை அதிகமாகின்றது. கடந்த வருடம் ஐந்து பேர் டெங்கு நோயினால் யாழ்ப்பாணத்தில் இறந்துள்ளார்கள். இவ்வருடம் இவ்வாறான இறப்புகள் ஏற்படாது இருப்பதற்கு டெங்கு பெருகும் இடங்களை அகற்றுதல் வேண்டும். அதாவது சுத்தப்படுத்தல் வேண்டும்
அண்மை காலங்களில் டெங்கு நோய் பெருகுமிடங்கள் சுற்றுச்சூழல் சுகாதாரம் மிக முக்கியமாகும் அவற்றினை டெங்கு விழிப்புணர்வு வாரம் மூலம் பொதுச் சுகாதார பரிசோதரர்கள் மூலம் செய்கின்றோம். புதிது புதிதாக கட்டிடங்கள் அமைக்கப்படுகின்றன அவை அரைகுறையாக இருக்கும்போது அதில் டெங்கு நுளம்பு பரவுவதற்கான சாத்திய கூறுகள் உண்டு
யாழ் நகருக்கு அப்பால் புதிய நகரங்கள் போல கடைகள் கட்டப்படுகின்றன தோட்ட காணிகளில் வீடுகள் மண்டபங்கள் கடைகள் கட்டும்போது அங்கு நுளம்பு பரவுவதற்குரிய சூழல் அதிகரித்து காணப்படுகின்றது,
டெங்கு நோயிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள சுற்றுச்சூழலை சுத்தமாக பேணுவதனால் டெங்கு நுளம்பில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள முடியும் என்றார்.

---

## ரணில்...

2022ஆம் ஆண்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சி -11% இருந்தது. இந்த வருடம் அது -3.5% அல்லது -4% என்ற அளவிற்குக் குறையலாம். 2024ஆம் ஆண்டு முதலே அதனை சாதகமான வளர்ச்சியை நோக்கி எடுத்துச் செல்ல முடியும்.
2019ஆம் ஆண்டு 1.6 மில்லியன் வரிமான வரி, வற் மற்றும் தேசிய அபிவிருத்தி வரி தொடர்பான ஆவணங்கள் இருந்தன. 2020ஆம் ஆண்டு வழங்கப்பட்ட வரிச் சலுகைகள் காரணமாக 2021 மார்கழி மாதம் இவை 4 லட்சம் என்கிற எண்ணிக்கைக்கு வீழ்ச்சியடைந்தன. நாட்டின் வருமானத்தில் ஏற்பட்ட இந்த முக்கியமான வீழ்ச்சியே இன்றைய பொருளாதார நெருக்கடியின் முதன்மைக் காரணி - என்றார்.

## இந்த வாரச் சொல்

## குமைஞ்சு

குமைஞ்சு என்கிற சொல் யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்கில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இந்தச் சொல் வெவ்வேறு அர்த்தங்களில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பயன்பாட்டிலுள்ளது. ஒரே இடத்தில் குவிந்துபோய்க் கிடப்பதைக் குறிப்பிடுவதற்கு இந்தச் சொல் பாவிக்கப்படுகிறது. மனவெதும் புகையைக் குறிக்கவும் பயன்படுத்தப்படுகின்றது.

"எல்லா மரங்களும் சேர்ந்து குமைஞ்சுபோய்க் கிடக்கு. அதனால்தான் நிலத்தில் வெயில் பிடிக்கவில்லை""

''வயிற்றுக்குள்ள ஏதோ குமைஞ்சு கொண்டு சத்தி வாறமாதிரி இருக்கு"

"அந்த அறைக்குள்ள புத்தகங்கள் கழிவுப் பொருள்கள் என எல்லாம் குமைஞ்சு போய்க் கிடக்கு"

''குப்பைகள் மழையில நனைஞ்சு குமைஞ்சுபோய்க் கிடப்பதால் எரிக்க முடியாமல் கிடக்கு"

"கால் பந்து விளையாடுபவர்கள் ஓரிடத்தல் குமைஞ்சு போய் நின்றால் எப்படிப் பந்தைக் கடத்தி ஆடுவது"

''அவள் தனக்குள்ளயே குமைஞ்சு குமைஞ்சு ஒடுங்கிப் போறாள்"

என்பவை குமைஞ்சு என்கிற சொல் குறிக்கும் சில அர்த்தங்களுக்கு உதாரணம்.

# அடம்பிடிப்பதை அடைவாரா கஜேந்திரகுமார்...?


Gajendrakumar Ponnambalam


G.G. Ponnambalam (snr.)


Kumar Ponnambalam

**நியூட்டன்**

அறவழிப் போராட்டங்கள் அவற்றைத் தொடர்ந்த ஆயுதப் போராட்டங்களின் பயனாகத் தமிழ் மக்கள் கடந்த 30 வருடங்களாகப் பெற்றுக்கொண்டவற்றைவிட இழந்தவைதான் அதிகம். இந்த இரண்டு அணுகுமுறை களிலும் கஜேந்திரகுமாரின் பேரனா ரான ஜி.ஜி. பொன்னம்பலமோ, தந்தையாரான குமார் பொன்னம்பலமோ ஈடுபட்டவர்கள் அல்லர். ரி.என்.எல். தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் ஆங்கில மொழியில் ஆக்ரோசமாகப பேட்டி கொடுத்த காரணத்தால் குமார் பொன்னம்பலத்தைப் புலி எனச் சிங் கள ஊடகங்களும், சிங்கள அரசியல்வாதிகளும் முத்திரை குத்தின.

இன்று 13ஆம் திருத்தச் சட்டம் வேண்டாம் சமஷ்டியே வேண்டும் என்கிறார் கஜேந்திர குமார் பென்னம்பலம். ஆனால், தான் கோரும் சமஷ்டியை அடைவதற்கு அவரிடம் எந்தத் திட்டமும் இருப்பதாகத் தெரியவில்லை.

**அரசுகளைச் சார்ந்து இயங்கி அரசியல்**

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்று தனது கட்சிக்குப் பெயர் சூட்டியிருந்தாலும் பருத்தித்துறையை அடித்தளமாகக் கொண்டு சைக்கிள் சின்னத்தில் அவரது பாட்டன் ஆரம்பித்த கொங்கிரஸ் கட்சியிலேயே தற்போதும் கஜேந்திரகுமார்

அரசியல் செய்து கொண்டிருக்கிறார்.

இந்தக் கொங்கிரஸ் ஆதரவாளர்கள் ஜி.ஜி.பொன்னம்பலத்தை ஏற்றுக் கொண்டவர்கள். ஐக்கிய தேசியக் கட்சியின் அரசில் (1948) தொழில் துறை மற்றும் தொழில் துறை ஆராய்ச்சி அமைச்சராகப் பதவி வகித்தவர் ஜி.ஜி. மலையகத் தமிழர்களை நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டும் என அப்போதைய தலைமை அமைச்சர் டி.எஸ்.சேனநாயக்காவுடன் இணைந்து நின்று முடிவெடுத்தவர்.

சிங்கள ஆட்சியாளர்களுடன் இணைந்துபோகும் இவரது போக்கை எதிர்த்துப் பலர் அவரது கட்சியை விட்டு வெளியேறினர். இத்தகைய தனது பாட்டனின் அணுகுமுறைக்கு எதிராக ஒற்றையாட்சிக்குள் தீர்வு வேண்டாம் என்கிறார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

2020 தேர்தலில் கூட 2ஆவது நாடாளுமன்றப் பிரதிநிதியைக் கிழக்கு மாகாணத்தில் தெரிவு செய்து தமது கட்சியின் விரிவாக்கத்துக்கும் கிழக்கு மக்களை இணைக்கவும் கஜேந்திரகுமார் முயற்சிக்கவில்லை. செல்வராசா கஜேந்திரனைக் கைவிட்டால் களத்தில் இறங்கிப் பணியாற்ற இவருக்கு யாரும் இல்லை என்ற நிலைதான் இருக்கிறது.

**அடுத்த தேசியத் தலைவராம்....!**

தேசியத் தலைவர் பிரபாகரனுக்குப் பின்னர் அடுத்த தேசியத் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமே என்று அவரது அமைப்பைச் சேர்ந்த சட்டத்தரணி சுகாஷ் ஒருமுறை கூறினார். தவிர மக்கள் அவ்வாறு கூறுவாதாக இல்லை. பிரபாகரனுக்கு அடுத்த நிலையில் வைத்து நோக்கக் கூடிய அளவுக்குக் கஜேந்திரகுமார் எந்த ஆளுமையும் இல்லாத நிலையில் இந்தக் கூற்று நகைப்புக் கிடமானதே. தம்மைப் புலிகளின் மறு



வடிவம் என்றும் புலிகள் பற்றிப் பேசத் தமக்கு மட்டுமே உரித்திருக்கிறது என்று கூறும் இரு கஜேந்திரர்களும் போர் முடிந்தபின் மறுவாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட 13 ஆயிரம் புலி உறுப்பினர்களை ஏன் தமது கட்சியில் இணைத்து அரசியல் நடத்தவில்லை என்ற கேள்வி எழுகிறது.

அவ்வாறு முன்னாள் புலிகளையும் அரவணைத்துச் செயற்பட்டிருந்தால் இன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைத் தமிழர்களின் ஏகப்பிரதி என்ற இடத்துக்கு மக்கள் உயர்த்தியிருப்பர். இறுதித் தேர்தலில் இரண்டு ஆசனங்களுடன் குறுகவேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. 2020 தேர்தலுக்குப் பின்னர் கஜேந்திரகுமார் அணியிலிருந்து மணிவண்ணன் அணி பிரிந்திருப்பதால் இனி வரும் தேர்தல்களில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவுத் தளம் குறைவதற்கே வாய்ப்புகள் அதிக முள்ளன.

**13இல் தீர்வு**

டக்ளஸ் தேவ னாந்தா, சம்பந்தன், சுமந்திரன், சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், விக்னேஸ்வரன் ஆகிய தமிழ் அரசியல் தலைவர்கள் 13ஐ மையப்படுத்தியாவது தீர்வொன்றைப் பெற்றுவிட நினைக்கிறார்கள். அது யதார்த்தத்தில் நடக்கவும் வாய்ப்புகளுண்டு. தம்மை மேலும் அழித்து விடாது பாதுகாத்துக் கொள்வதே நலிவடைந்த சமூகத்துக்கு அவசியமானது. அண்மையில் இலங்கைக்கு வந்த இந்திய அயலுறவுச் செயலர் கலாநிதி ஜெய சங்கர் கூட 13இனை முதலில் நடை முறைப்படுத்துவதற்கான அழுத் தத்தைக் கொடுப்பேன் என்றும் சமஷ்டி பற்றிப் பின்னர் முயற்சிக்கலாம் என்றும் கூறியுள்ளார்.

13இலுள்ள வடக்குக் கிழக்கு மாகாண இணைப்பு, காணி அதிகாரம், காவல்துறை அதிகாரம் ஆகியவைகூட முழுதாக அடையப்பட வாய்ப்பில்லாத சூழல் இருக்கும்போது ஒற்றையாட்சிக்குள் தீர்வு தேவையில்லை சமஷ்டியே தேவை என்று அடம்பிடிக்கும் கஜேந்திரர்கள் அதை எவ்வாறு அடைந்து காட்டப்போகிறார்கள் என்ற தமது திட்டத்தையும் வழி வரைபடத்தையும் தமிழ் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தினாலே தற்போதைக்குப் போதுமானது. அதில்கூட வடக்குக் கிழக்கு இணைப்பு விடயத்துக்கு முஸ்லிம்கள் ஒருபோதும் சம்மதிக்கப் போவதில்லை. அதை அடைவதற்கு அதிக அர்ப்பணிப்புகளையும் விட்டுக்கொடுப்புகளையும் ஒற்றுமையுடன் காட்ட வேண்டிய தமிழ்த் தலைவர்கள் கொள்கை ரீதியாகவாது 13ஐ நடைமுறைப்படுத்த விரும்புவது நல்லது. அதை விடுத்து சமஷ்டி தந்தால் மட்டும்தான் ஏற்றுக்கொள்வேன் என்று அடம்பிடிப்பதிலிருந்து கஜேந்திரகுமார் விடுபடவேண்டும்.

> **“13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தினாலே தற்போதைக்குப் போதுமானது. அதில்கூட வடக்குக் கிழக்கு இணைப்பு விடயத்துக்கு முஸ்லிம்கள் ஒருபோதும் சம்மதிக்கப் போவதில்லை.”**



சிறைக்குள்... 93

# சித்திரவதைகளை வினைத்திறனுடன் செய்தார்கள்

தர்மராசா

தமிழீழ விடுதலைப் போராட்டம் நீண்ட பல வருடங்களாகத் தொடர்ந்ததால் சித்திரவதைகளைச் செய்வதில் இலங்கை அரசின் புலனாய்வுப் பிரிவினர் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தனர். சித்திரவதைகளுக்குட்பட்டுப் பாதிக்கப்பட்டவர்கள் பலரை வைத்திய பரிசோதனைகளால் உறுதிப்படுத்த முடிவதில்லை. ஆனாலும் ஒரு சில உறுதிப்படுத்தப்பட்ட வைத்திய அறிக்கைகளைப் பன்னாட்டு மனித உரிமை அமைப்புகள் வெளியிட்டன. இதனால் இலங்கை அரசின் இன ஒடுக்குதலும் சித்திரவதைகளும் பன்னாடுகளுக்குத் தெரியவந்தன.

பன்னாட்டு அழுத்தத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்காகச் சித்திரவதையை ஒரு தொழில் முறையாகவும், கலை நுணுக்கமுள்ளதாகவும், நவீன கருவிகளைப் பயன்படுத்தியும் கச்சிதமாகக் கையாண்டனர். இதன் மூலம் கைதி இறந்துவிடாதவாறு பார்த்துக்கொண்டு வெளிக்காயம் இன்றிச் சித்திரவதை செய்யக் கற்றுக்கொண்டனர். தலையில் வெறும் தடியால் அடிப்பதைத் தவிர்த்துப் பெரிய புத்தகங்கள், ரெலிபோன் டிரக்ரி ஆகியவற்றைத் தலையில் வைத்துவிட்டு அதன் மேல் கொட்டன்களால் அடிக்கும் பக்குவம் அவர்களுக்கு இருந்தது. இதுபோன்ற சித்திரவதைகளில் அடிகாயங்கள் வெளித்தெரியாது ஆனால் மூளை கலங்கிப்போயிருக்கும். கண்கள் இருண்டுவிடும்

**18.2.2003** அன்று இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தால் "சித்திரவதை மற்றும் சித்திரவதை சாசனம்" என்ற கருத்தரங்கு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தக் கருத்தரங்கில் உரை நிகழ்த்திய மருத்துவப் பேராசிரியர் ரவீந்திர பெனாண்டோ சித்திரவதை தொடர்பான மருத்துவ சட்ட விளங்கங்கள் பற்றிக் கூறினார். சித்திரவதை தொடர்பான ஐ.நா. சாசனத்தில் சரத்து (2) இன் பிரகாரம் கட்டளையின்பேரில் சித்திரவதை என்பது மன்னிக்க முடியாதது. இந்தக் கட்டளையானது சட்டரீதியற்ற ஒன்றாய் இராணுவ, சிவில் சட்டங்களின் கீழ் விடுவிக்கப்படுகிறது. அது சட்டரீதியற்றது - என்றார்.

ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெறுவதற்காகக் காவல்துறையினர் அல்லது ஆயுதப்படையினர் அல்லது சிறை ஊழியர் ஒருவர் சந்தேக நபரைத் சித்திரவதை செய்தால் அந்த நபர் உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்வாரானால் சித்திரவதை செய்த நபருக்குச் சார்பாகச் சட்டமா அதிபரோ காவல் திணைக்களத்தினரோ செயற்பட முடியர்து - என்று பிரதி சொலிசிஸ்ட ஜெனரல் பாலித பெனாண்டோ கூறினார்.

# "ஒட்டுசுட்டானிலிருந்து படையினர் பின்வாங்கி ஓடினர்"

(கடந்தவாரத் தொடர்ச்சி)

ஜயந்த சேனவிரத்னவும் ஊரக்க சேனவிரத்னவும் இரத்தினபுரியைப் பிறப்பிடமாகக் கொண்ட சகோதரர்கள். இவர்கள் இருவரும் இலங்கைப் படைப்பிரிவில் இணைந்து மேஜர் ஜெனரல் பதவி வகித்துள்ளார்கள். இவர்களின் தந்தை பிரித்தானிய றோயல் படைப்பிரிவில் வான் படை அதிகாரியாகப் பதவி வகித்துள்ளார். 1983இல் திருநெல்வேலியில் 13 படையினர் புலிகளால் கொல்லப்பட்டதும் அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலைகளுமே தாங்கள் படையில் சேரக் காரணமாக அமைந்தது என்கிறார்கள் இவர்கள். இவர்கள் இருவரும் இணைந்து வனச யூரியூப் தளத்துக்கு வழங்கிய செவ்வியின் முதல் பகுதி கடந்த வாரம் வெளியாகியது. அதன் எஞ்சிய பகுதி இந்த வாரம்....



நலாபுறமும் இறங்கிப் புலிகளுக்கு எதிரான தாக்குதலை மேற்கொண்ட ஒட்டுசுட்டானில் நிலைகொண்டிருந்த பெரும் எண்ணிக்கையான படையினர் திடீரெனப் பின்வாங்கினர். புலிகள் மிக வேகமாகத் தாக்கிக்கொண்டு வந்ததால் அந்தப் படை நடவடிக்கை திட்டமிட்டவாறு அல்லாமல் நிலைகுலைந்து போனது. என்னைப் பொறுத்தவரை இன்றுவரை இந்தத் தாக்குதல் விடயம் மர்மமாகவே உள்ளது. புலிகளுக்கு அந்தளவு பலம் எப்படி வந்தது என்பதை இப்போதும் ஊகிக்க முடியாதிருக்கிறது. இந்தப் பின்வாங்கலை நிறுத்துவதற்காகப் புளியம்குளத்தில் முகாம் ஒன்றை அமைத்தோம்.

**மொழியாக்கம்**
**கமலநாதன்**

### இறுதிப் போர் நடவடிக்கை

இறுதிப்போரின்போது எமது படையணி வவுனியாவிலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கி முன்னேற வேண்டியிருந்தது. 58, 59ஆவது சிங்கப் படையணி மற்றும் டாஸ்க் போர்ஸ் 1, 2 எனப் பல படையணிகள் இந்த நடவடிக்கையில் களமிறங்கின. நான் டாஸ்க் போர்ஸ் 2க்குப் பொறுப்பாக இருந்தேன். ஓமந்தை, புளியங்குளம், நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு ஆகிய பகுதிகள் ஊடாகப் புலிகளை எதிர்த்தபடி முன்னேறினோம். முத்தையன்கட்டுப் பகுதியில் புலிகளின் பல முகாம்களைத் தாக்கியழித்தோம்.

தனது நாட்டுக்காகக் குறித்த அதிகாரி இத்தகைய நடவடிக்கையில் (சித்திரவதை) ஈடுபட்டிருந்தாலும் சட்டமா அதிபர் அந்த அதிகாரி மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தால் அரசின் சகல நடவடிக்கைகளும் அந்த அதிகாரிக்கு சாதகமாகவே அமையும் - நன்றி - தினக்குரல் 20.08.2003

சித்திரவதை தொடர்பாக மேலும் ஒரு விளக்கத்துக்காக லோன் ஜெகப்சன், பீட்டர் வேஷ்டி ஆகியவர்களால் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரையான "ரோர்ச்சர் சேவாய்வேர்ஸ்" (சித்திரவதைக்குள் வாழ்தல்) இலிருந்து ஒரு பகுதியை இங்கு தருகிறேன்.

**சித்திரவதைக்கூடம் - 1**

சாட்சி சித்திரவதையால் துவண்டுபோய் இருக்கிறான். சித்திரவதை செய்வோர் மருத்துவர் ஒருவரிடம் வருகின்றனர். கைதியின் மனதில் சிறிது நிம்மதி தோன்றுகிறது. கண்களில் ஆவல் வருகிறது. ஏதோ முறையிட விரும்புகிறான். ஆனால் நடப்பது தலைகீழ். மருத்துவரின் ஆலோசனையுடன் சித்திரவதை கடுமையாகிறது. முன்பைவிட அலறல் அல்லது அவனின் சத்தம் உயர்கிறது. ஆய்வுகளின்படி உலகளாவிய ரீதியில் கனிசமான அளவு மருத்துவர்களும் தாதிமார்களும் சித்திரவதைகளில் பங்குகொண்டுள்ளார்கள் என அறியமுடிகிறது.

இனிச் சித்திரவதைகளின் விளைவுகள் என்னவாக இருக்கின்றன என்பதைக் கவனிப்போம். விளைவுகள் உடனடியாகவும் நீண்ட காலப்போக்கில் தோன்றுவதாகவும் இருக்கலாம். சிகிச்சை அளிக்கப்படும்போது உடன் நீங்கிவிடுவதாகவோ மெதுவாக நீங்குபவIயாகவோ இருக்கலாம். சித்திரவதைகளால் ஏற்படும் விளைவுகள் வாழ்க்கை பூராவும் நிலைத்து விடுகின்றன. உடல் அங்கவீனம், இனப்பெருக்க ஆற்றல் இழப்பு, என்பவற்றை நிரந்தர விளைவுகளாகக் கருதாலம்.

(தொடரும்)

அங்கு பயிற்சி முகாம்கள், குண்டு தயாரிக்கும் தொழிற் சாலைகள், பெற்றோல் - டீசல் சேமித்து வைத்திருந்த இடங்கள் எனப் பலதையும் தாக்கியழித்தோம். மிக அடர்ந்த காட்டுக்குள் இந்த முகாம்கள் இருந்ததால் வானூர்திகள் மூலம் இந்தப் பகுதியை அவதானித்தாலும் முகாமைக் கண்டுபிடிக்க முடியாதிருந்தது. முகாமுக்கு மிக அருகாக முன்னேறிச் சென்ற பின்னரே முகாம்கள் இருப்பதைக் காண்டுபிடிக்க முடிந்தது. அங்கு இல குவாக முன்னேறிச் செல்வதற்கும் பாதைகள் இருக்க வில்லை. முகாம்களை அண்மித்த பகுதியில் பெரிய கிடங்குகள் வெட்டப்பட்டு அவற்றை மிகநுட்பமாகச் சருகுகளால் மறைத்திருந்தார்கள். இந்தக் கிடங்குகள் படை முன்னேற்றத்துக்குப் பெரிய பிரச்சினையாக இருந் தன.

எமது வேவு அணியை அனுப்பி வேவு பார்த்ததில் புலிகள் வெளியேறிச் செல்லும் வழித்தடங்களைக் கண்டு பிடித்தோம். அதனூடாக முன்னேறினோம். அவ்வாறான பாதை ஒன்றில் கிளைமோரைப் பொருத்திப் புலிகளின் வாகனம் ஒன்றைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தினோம். அதில் தளபதி ஒருவரும் 5 பேரும் இறந்தார்கள்.

**பல வேகய படை நடவடிக்கை**

1991இல் ஆனையிறவு முகாமைத் தக்க வைப்பதற் காக மேற்கொள்ளப்பட்டது பலவேகய நடவடிக்கை. நானும் தம்பியும் பல வருடங்களாகப் படையில் பணியாற்றிய போதும் இருவரும் ஒருவரை ஒருவர் சந்திக்க முடிந்த தில்லை. ஆனால், இருவரும் சந்தித்துக்கொண்ட முதல் சம்பவம் இந்தப் பலவேகய தாக்குதல் தான். நான் தாக்குதல் அணியிலும் தம்பி தொலைத் தொடர்புப் பிரிவிலும் அங்கு சென்றோம். ஆனையிறவு முகாமுக்குள் சென்ற முதல் அதிகாரிகள் என்ற வகையில் நானும் தம்பியும் ஒரே நேரத்தில் சென்றது மறக்க முடியாத நிகழ்வாகும்.

**மேஜர் ஜெனரல் ஊரக்க சேனவிரத்ன**

நான் படையில் செய்திப் பரிமாற்றப் பிரிவில் கடமை யாற்றியதால் மேலதிக பயிற்சிக்காக இந்தியாவுக்கும் சென்றிருந்தேன். யாழ்ப்பாணம் - கோட்டையில் சிக்கியி ருந்த படையினரை மீட்கும் போரில் ஜெனரல் ஹாமினி கெட்டியாராய்ச்சியின் தொடர்பு சாதனப் பொறுப்பா ளராகக் கடமையாற்றினேன். இந்தப் படை முன்னெ டுப்பை மண்டைதீவிலிருந்து மேற்கொண்டோம். இதில் இரு படை அணிகள் பங்கு பற்றின. இத்தாக்குதலைப் பகலில் மேற்கொள்ள முடியாதவாறு புலிகள் முற்றுகை யிட்டிருந்தார்கள். அதனால் இரவு நடவடிக்கையில் இறங்கினோம். முதலில் ஏற்கனவே காயப்பட்டிருந்த படையினரைக் கோட்டையிலிருந்து வெளியில் எடுத் தோம்.

அந்த நாள்களில் படையினரிடம் அதி நவீன வசதி யுள்ள தொலைத் தொடர்புக் கருவிகள் இருக்கவில்லை. அப்போது நான் வைத்திருந்த கருவிகளைப் புலிகள் ஒட்டுக்கேட்கும் நிலை காணப்பட்டது. யாழ்ப்பாணம் கோட்டையைப் புலிகள் தாக்கியபோது நான் கையில் வைத்திருந்த தொலைத்தொடர்புக் கருவியுடன் தண்ணீ ருக்குள் குதித்தேன். அந்தக் கருவி தண்ணீரில் நனைந்து விட்டது. அதனால் எமக்கிருந்த ஒரேயொரு தொடர் பாடல் வசதியும் இல்லாது போய்விட்டது. பின்னர் அந் தக் கருவியைச் சுத்தம் செய்தபோது மீண்டும் இயங் கியது. பிரித்தானியாவில் தயாரிக்கப்பட்ட அந்தக் கருவி நீர் புகாதவாறு செய்யப்பட்டிருந்தது.

> **“நான் வைத்திருந்த கருவிகளைப் புலிகள் ஒட்டுக்கேட்கும் நிலை காணப்பட்டது. யாழ்ப்பாணம் கோட்டையைப் புலிகள் தாக்கியபோது நான் கையில் வைத்திருந்த தொலைத்தொடர்புக் கருவியுடன் தண்ணீ ருக்குள் குதித்தேன்.”**

**இறுதிப் போர்**

இறுதிப் போர்க் காலத்தில் கேணல் பிரசன்ன சில்வாவின் தொலைத் தொடர்பு அதிகாரியாகக் கடமையாற்றி னேன். நாகர் கோவில், சுண்டிக்குளம், புதுமாத்தளன் வரை எமது படையணியின் செயற்பாடாக இருந்தது. கடற்புலிகளின் முக்கிய தளங்களை அழித்தது எமது படையணியே. கிழக்குப் புறக் கடற்கரை ஓரமான படை முன்னெடுப்பு என்பதால் வாவிகள், ஏரிகள், சதுப்பு நிலங்கள், சுனைகள் என அனைத்துப் பகுதிகளுக் குள்ளாகவும் செயற்படவேண்டியிருந்தது.


பல சந்தர்ப்பங்களில் எனது தொடர் பாடல் சேவைக்கு மேலதிகமாக துப் பாக்கி ரவைகள், உடனடியாகத் தேவைப் படும் பொருள்கள், அவற்றின் வழங்கல் பற்றிய பொறுப்பும் என்னிடம் இருந்தது. அவற்றை என்னிடம் விட்டுவிட்டதால் கேணல் பிரசன்ன சில்வா அதுபற்றிப் போர் முடியும் வரை எதுவும் கேட்கவும் இல்லை கட்டளையிடவும் இல்லை. மிக நம்பிக்கைக்குரியவராக என்னை வைத்தி ருந்தார்.

நள்ளிரவு 1 மணிக்கு ஏனையவர்க ளுக்குத் தெரியாமல் முன்னரங்க நிலைகளுக்குச் சென்று சிப்பாய்கள் எவ்வாறு செயற்படுகிறார்கள் என்று கவனிப் பார். அவ்வாறு செல்லும்போது என்னிடம் மட்டும் கூறி விட்டுச் செல்வார்.

நான் படை முன்னெடுப்புகளின்போது முன்னரங்க நிலைகளில் இல்லாது சற்றுப் பின்னால் நின்று சகல விடயங்களையும் கவனித்தேன். எமது படையணிகளுக்கு ஏற்படும் இழப்புகளைத் தவிர்ப்பதில் எனது பணி முக்கி யமானதாக இருந்தது.

# இணைப்பாட்சி என்கிற சமஷ்டி!

"சமஷ்டியா தனிநாடா" என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் நவீன வரலாற்றுத்துறை விரிவுரையாளரான மு.திருநாவுக்கரசு அவர்களால் எழுதப்பட்ட நூல் இன்றைய காலகட்ட விவாதங்களுக்கு மிகவும் பயனுடையதாக அமையும். 2004ஆம் ஆண்டு வெளியாகிய இந்த நூல் சமஷ்டி - தோற்றமும் வளர்ச்சியும், சமஷ்டி - ஜனநாயகமும் சுயநிர்ணய உரிமையும், பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையும் அதன் வரலாற்று நடைமுறையும், சமஷ்டி யாப்புகள் - அமெரிக்க சுவிஸ் அனுபவங்கள், இலங்கையில் சமஷ்டிக் கொள்கை ஆகிய அத்தியாயங்களை உள்ளடக்கியிருக்கிறது. 234 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் 2009ஆம் ஆண்டு அறிவு அமுது பதிப் பகத்தால் கிளிநொச் சியில் வெளியிடப் பட்டது. தீர்வு பற்றிய பேச்சுக்கள், கலந்து ரையாடல்கள் இடம் பெறும் இந்தக் காலத்தில் அதன் ஐந்தாம் அத்தி யாயத்தைச் செம்மண் ணில் வாசிக்கத் தருகிறோம்.




09

மு.திருநாவுக்கரசு

## இலங்கையில் சமஷ்டிக் கோரிக்கை

பண்டாரநாயக்கா தேசியம் என்பதன் பெயரால் பிரதிநிதித்துவப்படுத்தியது பெரிதும் நிலமானியச் சமூக அம்சங்களைத்தான். சிங்கள மக்கள் மத்தியில் காணப் பட்ட நிலமானியச் சமூக அம்சங்களைத் தேசியம் என்ற பொய்ப்பெயரில் பண் டாரநாயக்கா அப்படியே உயிரூட்டிப் பாதுகாக்க முற்பட்டார்.

பிரித்தானிய படைத்தளங்களை அகற்றுதல், தேசிய மயமாக்கற்கொள்கை என்ப வற்றின் மூலம் பண்டாரநாயக்கா முற்போக்குவாதிபோற் தோன்றினாலும் அவரது ஏனைய அம்சங்கள் அனைத்தும் நிலமானிய காலப் பிற்போக்குத்தனம் மிக்கவை யாகவே இருந்தன. சேனநாயக்க குடும்ப ஆதிக்கத்தைப் பாதுகாக்கும் அரணாகப் பிரித்தானியத் தளங்கள் உண்டு என்பதால்தான் அவர் பிரித்தானிய எதிர்ப்புக் கொள் கையைப் பின்பற்றினாரே தவிர தேசிய எண்ணத்தில் அடிப்படையிலல்ல.

இலங்கையின் இடதுசாரிகளைத் தோற்கடித்தது ஐ.தே.க. அல்ல சு.க.தான். பண் டாரநாயக்காவின் கொள்கையே இதற்கான மூலமாகும். அதாவது தனது விலாங்குத்த னமான கொள்கை மூலம் இடதுசாரிகளுக்குப் பண்டாரநாயக்கா இடதுசாரியாகவும், மதவாதிகளுக்கு அவர் மதவாதியாகவும், இனவாதிகளுக்கு அவர் இனவாதியாகவும் தேசியவாதிகளுக்கு அவர் தேசியவாதியாகவும் காட்சியளித்ததன் மூலம் இவர் இவை அனைத்தையுமே ஏப்பமிட்டு நாட்டைச் சீரழித்தார். இலங்கையின் இடதுசாரி கள் மறைந்துபோன இடம் பண்டாரநாயக்காவின் சுங்கான் புகைக்குள்ளேயே தவிர துப்பாக்கிக் குழாய்களுக்குள் அல்ல.

## சமையல் சமையல்



# இராசவள்ளிக் கிழங்குக் கஞ்சி...!



கடந்த வாரம் நாம் மரவள்ளிக் கிழங்குக் கஞ்சியைச் செய்வது எப்படி என்று பார்த்திருந்தோம். மிகவும் இலகுவான செய்முறையைக் கொண்ட மரவள்ளிக் கிழங்குக் கஞ்சி என்கிற பாற் கஞ்சியை நீங்கள் செய்து சுவைத் திருப்பீர்கள். அந்த வகையில் இந்த வாரம் இராசவள்ளிக் கிழங்குக் கஞ்சியைச் செய்வது எவ்வாறு என்று நோக்குவோம்.

நாவல் நிறத்தில் தோற்றமளிக்கும் இராசவள்ளிக் கிழங்குக் கஞ்சி நிறத்தில் கண்ணைக் கவருவதோடு மாத்திமல்லாமல் சுவையில் நாவையும் ஈர்க்கும் என்பதில் ஐயமில்லை. மரவள்ளிக் கிழங்குக் கஞ்சியைத் தயாரிக்கும் செய்முறைபோலவே இருக்கும் இந்த இராசவள்ளிக் கஞ்சியைத் தயாரிப்பதும் சுலபம். ஆனால், இராசவள்ளிக் கிழங்கிலுள்ள சுணையை அகற்றுவதற்காக துண்டுகளாக்கிய பின்னர் அதை உப்பிட்டு நன்றாகக் கழுவி எடுக்க வேண்டும். கிழங்கில் படிந்துள்ள சுணைத் தன்மையைப் போக்குவதற்காக நாலைந்து தடவைகள் அப்படிக் கழுவினால் போதுமானது. அத்தோடு சவ்வரிசி சேர்க்கும்போது இதன் சுவை அதிகப்படும்.

**தேவையான பொருள்கள்**

இராசவள்ளிக் கிழங்கு - 1 கிலோ
சவ்வரிசி - 100 கிராம்
சீனி - கால் கிலோ
தேங்காய்ப்பால் - 1 தேங்காயினது
உப்பு - சிறிது

**எப்படிச் செய்வது...?**

இராசவள்ளிக் கிழங்கைத் தோல் சீவித் துண்டுகளாக நறுக்கிக் கொள்ளுங்கள், பின்னர் உப்புச் சேர்ந்து நன்கு பிசைந்து நாலைந்து தடவைகள் கழுவி எடுங்கள். கழுவி எடுத்ததும் சட்டி ஒன்றுக்குள் நீர் விட்டு கிழங்கைப் போட்டு அவியுங்கள். கையோடு சவ்வரிசியைச் சேர்த்துக் கொள்ளுங்கள். கிழங்கு அவிந்ததும் நன்கு மசித்துக் கொள்ளுங்கள். மசித்த பின்னர் தேங்க்காய்ப்பால், சீனி ஆகியவற்றைச் சேருங்கள். கஞ்சி கொதித்துவர உப்புச் சேர்ந்து இறக்குங்கள். சூடாக இருக்கும்போது கஞ்சி போன்ற பதத்தில் இருக்கும் இது சூடாறிய சில மணி நேரங்களில் களி போல மாறிவிடுவதைக் காணலாம். களி போலான தைத் துண்டுகளாக்கிச் சுவைக்கும்போது சுவை தூக்கலாகவே இருக்கும்.

பண்டாரநாயக்காவைச் சரியாக எடைபோட்டால் அவரிடம் காணப்படும் தேசியப் பண்புகளைவிடவும் நிலமானியப் பண்புகளே அதிகம் உள்ளன. மொத்தத்தில் நிலமானியம், இனவாதம், சந்தர்ப்பவாதம் ஆகிய மூன்றினதும் கலவையே பண்டாரநாயக்கா. அவரது நிலமானியத்துக்குள் தேசியத்தையும், சந்தர்ப் பவாதத்துக்குள் முற்போக்கு அம்சங்களையும் கண்டுகொள்வதால் மொத்தத் தவறு ஏற்பட்டுவிடுகிறது. இத்தகைய பிற்போக்கான கலப்பு ஆளுமைக்குள்ளாலேதான் பண்டாரநாயக்கா பண்டா-செல்லா ஒப்பந்தத்தைச் செய்துகொண்டமையையும், தான் செய்துகொண்ட ஒப்பந்தத்தைத் தானே பின்பு கிழித்தெறிந்து கொண்டமையையும் புரிந்துகொள்ளவேண்டும். பண்டாரநாயக்கா இலங்கைக்கு விட்டுச்சென்ற முதுசம் என்னவென்று கேட்டால் இத்தகைய விலாங்குத்தன்மை வாய்ந்த பிற்போக்குக் கலவை ஒன்றுதான்.

உள்நாட்டு வெளிநாட்டு ரீதியில் இத்தகைய விலாங்குத்தனமான ஒரு பிற்போக்குக் கொள்கைதான் இனப்பிரச்சினைக்கான சிங்களத் தரப்பின் அணுகுமுறை என்ற நிலைப்பாட்டைத் தோற்றுவித்தார். இது சிங்கள இனவாதத்துக்கு பண்டாரநாயக்கா விட்டுச் சென்ற முதுசம். எக்கட்சி அரச கட்டிலேறினாலும் இம் முதுசத்தை அகுபவிக்கிறது. மொத்தத்தில் பண்டாரநாயக்கா முன்வைத்த "தேசியவாதம்" என்பது அனைத்து பிற்போக்குச் சக்திகளின் குகை என்பதுதான் உண்மை. அதாவது பிற்போக்குச் சக்திகள் குகை ஸ்ரீ பண்டாரநாயக்காவின் தேசிய வாதம். இந்தக் குகைக்குள் வைத்துச் சடங்காசாரத்துடன் பலியிடப்படும் ஆட்டுக்குட்டிகளாய் இலங்கை வாழ் மக்களும் இலங்கைத் தீவும் உள்ளன.

இவ்விடத்தில் இடதுசாரிகளைப் பற்றிய ஒரு சிறு மதிப்பீடு செய்வது நலம்.

இலங்கைத் தமிழர்க்குப் பிரிந்து செல்லும் உரிமை உண்டு என்ற நிலைப்பாட்டை முதல் முறையாக 1944 ஆம் ஆண்டு ஒக்டோபரில் இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி எடுத்தது.

சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளும் உத்தியோக மொழிகளாக வேண்டும் என்ற நிலைப்பாட்டை லங்கா சமசமாஜக் கட்சியும், இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியும் மிகத் தெளிவாக முதலில் கொண்டிருந்தன. ஆனால், காலகதியில் இந்தக் கட்சிகள் பண்டாரநாயக்காவின் விலாங்குத்தனமான அரசியலிற்குள் தம்மைப் பலியிட்டன.

உள்ளடக்கத்தில் மேற்படி இரு பிரதான இடதுசாரிக் கட்சிகளிடமும் காணப்பட்டது தொழிற்சங்கவாதமே தவிர புரட்சிகர அரசியலல்ல. மேலும் பிரித்தானியத் தொழிற்கட்சியுடன் ஒப்பிடக்கூடிய அரசியல் உள்ளடக்கத்தைத் தான் இவர்கள் கொண்டுமிருந்தனர். ஆதலால் மிகவிரைவில் இவர்களது சோஷலிசம் பண்டா இஸத்துக்குள் கரைந்துபோனது.

இலங்கையிலே தோன்றிய கொம்யூனிஸ்டுக்களுள் ஒப்பிடுகையில் என்.சண்முகதாசன் தலைமையிலான கொம்யூனிஸ்டுகளிடம்தான் (பீக்கிங்) புரட்சிகர அம்சங்கள் பல காணப்பட்டன. குறிப்பாகச் சாதி எதிர்ப்புப் போராட்டத்தில் இவர்கள் சிறப்பான பாத்திரம் வகித்தார்கள். ஆனால், சாதிப் போராடத்துக்கு அப்பால் அரசியலில் முன்னேறவில்லை என்பதுடன் அச் சாதிப்போராட்டத்திலும்கூட ஓர் எல்லைக்கப்பால் அவர்களால் முன்னேற முடியவில்லை. (தொடரும்)

# ஜல்லிக்கட்டுக்கு வேண்டும் அங்கீகாரம்...!



விதுரன்

தமிழர்களின் புதிய வருடத்தையொட்டிய தைப்பொங்கலுடன் இந்தியாவின் தமிழ் நாட்டில் களைகட்டுகின்ற ஒரு வீர விளையாட்டு ஜல்லிக்கட்டு. இதில் அதிகம் கிராமத்து ஏழைகளே ஈடுபடுகின்றனர். வெளியுலகுக்குத் தம்மை வீரத்தின் மூலம் நிரூபிக்கின்றனர்.

மக்கள் இனக்குழுக்களாக வாழ்ந்த காலத்தில் அவர்களின் சொத்தாகவும் செல்வமாகவும் மாடுகளே இருந்தன. இதனால் மாடுகளைக் களவாடுவது, கையகப்படுத்துவது ஊர்களில் வழக்கமாக இருந்தது. அயலூரவர்கள் மாடுகளைத் திருடிச் செல்வதைத் தடுக்கும்நோக்கில் தமது காளை மாடுகளைப் பயிற்றுவித்துக் கொம்பு சீவி வைத்து மாட்டைக் கையகப்படுத்த வருவோரைக் கொம்பால் கிழித்துக் கொல்லும் வழக்கம் ஏற்பட்டது. தம் மீது சீறிவரும் காளைகளை மாடு திருட வருவோர் மடக்கிப் பிடித்து அந்த மாடுகளைத் திருடிச் செல்லப் பழகினார்கள். மாடு சீறிப் பாயும் பயிற்சியும் அதை மீறி மாடுகளை அடக்கிக் கொண்டுபோகும் அன்றைய வாழ்வியலின் தொடர்ச்சியே காலப்போக்கில் ஜல்லிக்கட்டாகியது என்பதும் செவிவழிக்கதை.

**அன்பாக வளர்க்கப்படும் மாடுகள்**

மூர்க்கமான பெரும் ஜல்லிக்கட்டுக் காளைகள் வளர்க்கப்படுவோரின் செல்லப்பிள்ளையாக அவர்கள் சொல்வதைச் செய்யும் பணிவுள்ள காளையாகக் காணப்படுகின்றன. சிறுவயதிலிருந்து குடும்பத்திலுள்ள சிறுவர் முதல் வயோதிபர்கள் வரை ஆண், பெண் வேறுபாடின்றி வளர்க்கப்படும் தமது காளைகளுடன் அன்பாக இருக்கின்றனர். அந்த வீட்டிலுள்ள சிறு பிள்ளை கூப்பிட்டால்கூட அருகில் வந்து நிற்கிறது ஜல்லிக்கட்டுக் காளை.

குழு மாடுகள் என்று அழைக்கப்படுகிற குழப்படியான காளைகளை ஜல்லிக்கட்டுப் போட்டியில் ஈடுபடுத்துவதில்லை. அதனால் ஜல்லிக்கட்டுக் காளைகள் வளர்ப்பவர்களுக்கு அடங்கிச் செயற்படுகின்றன. தம்மை ஒரு நோக்கத்துக்காக வளர்க்கிறார்கள் என்பதைப் புரிந்து இவை செயற்படுகின்றன.

ஜல்லிக்கட்டுக் காளை ஒன்றை வளர்க்கும் பெண் ஒருத்தி இவ்வாறு கூறுகிறார், எங்களுக்கு ஏதாவது பிரச்சினை வந்துவிட்டால் நாங்கள் எமது காளையை வீட்டிலுள்ள மூத்த சகோதரன் போல நினைத்துத் எமது பிரச்சினகளை அந்தக் காளையுடன் கூறினால் அது அமைதியாகக் கேட்டுக்கொண்டிருக்கும். பின்னர் அந்த விடயத்தில் இப்படிச் செய்யலாமா என்று ஆலோசனை கேட்டால் கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு ஆம், அல்லது இல்லை என்று தலையாட்டும். அதன்படி செய்தால் எமக்கு அந்த விடயத்தில் வெற்றி வரும் - என்கிறார். அந்தளவிற்கு காளைகள் வீட்டில் ஒருவராக அங்கு வளர்க்கப்படுகின்றன.

**இறுக்கமான பயிற்சி**

விளையாட்டு வீரன் பல வருடங்கள் பயிற்சி பெற்றுப் போட்டியில் பங்குபற்றுவதுபோலவே ஜல்லிக் கட்டுப் போட்டியில் களமிறக்குவதற்காகக் காளைகளுக்குத் தினமும் பயிற்சி வழங்கப்படுகிறது. மண்ணைக் கொம்பால் கிண்டி எறியும் பயிற்சி, தண்ணீருக்குள் மூழ்கி மேலெழும் பயிற்சி, நீச்சல் பயிற்சி, வேமாக ஓடும் பயிற்சி, நீண்டதூரம் நடக்கும் பயிற்சி, உணவுக் கட்டுப்பாடு, உரிய நேரத்துக்கு உணவு வழங்குவது, தண்ணீரை மட்டுப்படுத்திக் கொடுப்பது எனப் பல பயிற்சிகள் பல வருடங்களாக வழங்கப்படுகின்றன. இதற்காகத் தம்மை முழுவதுமாக எஜமானர்கள் அர்ப்பணிக்கின்றனர்.

இந்த முறை ஜல்லிக்கட்டுப் போட்டிகளில் 11வயதான பெண் ஒருத்தியும் வேறு பல பெண்களும் களமிறங்கி வீரத் தமிழிச்சி என்று புகழப்பட்டுள்ளனர். இளைஞர்களுக்கு இணையான வீரமும் விவேகமும் ஆற்றலும் துடிப்பும் இந்தப் பெண்களிடமும் காணப்பட்டது.

இதை ஒரு கலையாகவும் வருமானம் ஈட்டும் முயற்சியாகவும் ஏழைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

**ஜல்லிக் கட்டின் துயரம்**

திறந்துவிடப்படும் தமது காளை அடக்குபவர்களிடம் பிடிபட்டு விடக்கூடாது என்று காளைகளின் எஜமானர்கள் எதிர்பார்க்கின்றனர். காளையை அடக்கச் செல்லும் இளைஞர்கள் காளையைப் பிடித்து விடத் துடிக்கின்றனர். இந்த இரு வேறு முரணான எதிர்பார்ப்புகளுடன்தான் ஜல்லிக்கட்டுப் போட்டி நடக்கின்றது. இது மிகப் பெரிய வரலாற்றைக் கொண்டது. காளைகளை அவிழ்ப்பது, வாடி வாசலால் வெளியே பாயவிடுவது, அந்த இடத்தில் நின்று காளை மீது பாய்ந்து அதன் ஏரியைப் பிடிப்பது, அதனுடன் நேருக்கு நேர் மல்லுக் கட்டுவது (ஒரு காளையை ஒருவர் மட்டுமே பிடிக்கலாம்), பார்வையாளர்கள் பாதுகாப்பான இடத்தில் நின்று பார்ப்பது, காளை பிடிபட்டது அல்லது பிடிபடவில்லை என்ற நிபந்தனைகளை எந்தெந்த சந்தர்ப்பத்தில் எவ்வாறு தீர்ப்பு வழங்குவதுபோன்ற விடயங்களில் ஓர் எழுதப்படாத கிராமிய விளையாட்டு விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. இது பாரம்பரிய வழக்கமாக விளையாட்டில் ஈடுபடும் அனைவருக்கும் தெரிந்திருக்கிறது. தமிழ்நாட்டுத் தமிழருக்கேயுரிய பண்பாடாகவும் வாழ்க்கை நெறிமுறையாகவும் பேணப்பட்டு வருகிறது.

இந்த முறை நடந்த போட்டி ஒன்றில் காளை பிடிப்பவரிடமிருந்து தப்பிப்போக அதிக பிரயத்தனப்பட்டது. அதைப் பிடித்த மாடு பிடி வீரனோ அந்தக் காளை தப்பிவிடாதபடி இறுக்கிப் பிடித்தான். காளையும் அந்த வீரனும் சமமாகப் போராடியதால் வழக்கத்துக்கு மாறாகப் பரிசில்கள் இருவருக்கும் வழங்கப்பட்டன.

**கல்விச் சான்றிதழுக்கு மட்டும் அரச வேலை என்ற நிலை மாறி மாடு பிடி வீரத் திறமைக்காகப் பொருத் தமான வேலைகளை வழங் குவது அரசின் கடப்பாடாகும்**



**அங்கீகாரம் அளிக்க வேண்டும்**

பொருளாதார ரீதியில் மிகவும் பாதிக்கப்பட்ட மக்களே காளைகளை வைத்துத் தமது வாழ்வாதாரத்தைத் தேடும் நிலையில் இதில் அதிக கரிசனை காட்டுகிறார்கள். மாடுபிடி வீரர்கள் உடலையும் உயிரையும் பணயம் வைத்துப் போட்டிகளில் களமிறங்குகின்றனர். எந்த நேரத்தில் மாடு தூக்கி வீசி, கொம்பு குத்தி, காலால் மிதித்து இறப்பான் என்று எதிர்வுகூற முடியாத துர்ப்பாக்கி நிலை இந்தப் போட்டியில் காணப்படுகிறது. ஏனைய விளையாட்டுகளில் மனிதர்கள் மட்டும் விளையாடுவதால் அதற்கான நெறிமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இங்கு மிருகமும் மனிதனும் பொருதுகின்ற நிலையிருப்பதால் விளையாட்டு நெறிடமுறைகளில் மாட்டைத் தண்டிக்க முடியாது.

இந்தமுறை நடந்த போட்டிகளில் 18 காளைகளை பிடித்த ஒருவர் அந்த இடத்திலேயே சாவடைந்தார். பல வீரர்கள் காயமுற்றுத் தமது உடல் அங்கங்களை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக இந்தப் போட்டியில் ஈடுபட்டு வெற்றி பெற்று முதற் பரிசாக மகிழுந்தைப் பெற்றவர்கள்கூட அந்தப் பரிசை விட்த தமக்கான சமூக அங்கீகாரத்தையும் தமக்கான வேலை ஒன்றையுமே தமிழ்நாட்டு அரசிடம் கோரி நிற்கின்றனர். கல்விச் சான்றிதழுக்கு மட்டும் அரச வேலை என்ற நிலை மாறி மாடு பிடி வீரத் திறமைக்காகப் பொருத்தமான வேலைகளை வழங்குவது அரசின் கடப்பாடாகும். அதைவிட ஜல்லிக்கட்டை முக்கிய விளையாட்டாக அங்கீகரித்து விளையட்டின் ஓர் அங்கமாகப் பருவ கால விளையாட்டாக அங்கீகரித்து ஆதரவளிக்க வேண்டும். தரப்படுத்தல்களைச் செய்து சான்றிதழ்கள் வழங்குவதும் அவசியம்.

தற்போது இது தமிழ்நாட்டில் அரசியலாக்கப்பட்டிருப்பது தெரிகிறது. மாடு பிடி வீரர்கள் தாம் அணிகின்ற ஆடைகளில் முதல்வரின் படம், அரசியல் சின்னங்கள், கட்சிகளைக் குறிக்கும் வர்ணங்கள் என ஆடை அணிந்து விளையாடினர். இந்த அரசியல் பிரசாரம் தவிர்க்கப்பட வேண்டும்.

# தமக்குத் தாமே சேறு பூசும் தேர்தல்களம்

**சத்தியநாதன்**




தமிழர் அரசியல் என்பது சிங்கள ஆட்சியாளர்களையும், சிங்களக் கட்சிகளையும் விமர்சனம் செய்வதன் மூலம் தம்மைப் புனிதர்களாகக் காட்டி வாக்குகளைப் பெறுவதாகவே இருந்து வருகிறது. அதைவிடத் தமக்குள் ஒருவருக்கு ஒருவர் சேறு பூசும் நிலையும் இருக்கிறது. இந்த முறை இந்தச் சேறு பூசும் நிலை தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளுக்கிடையில் உக்கிரமடைந்திருக்கிறது. தம்மை நியாயப்படுத்துவதற்காக எந்தப் பொய்யையும் கூசாமல் கூறிவருகின்றனர். தமிழ் அரசியல்வாதிகளிடமும் கட்சிகளுக்குள்ளும் இதுவரை காலமும் இரகசியமாக இருந்த பல விடயங்கள் சமூக வலைத்தளங்களில் சேறாகக் குவிந்திருக்கின்றன. இது மக்களைப் பொறுத்தவரை நல்ல விடயமே.

**துணைவேந்தரின் ஆலோசனை...!**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தரான சிறிசற்குணராஜா பொதுவெளியில் உரையாற்றிய காணொலி ஒன்று சமூகவலைத்தளங்களில் உலாவந்தது. அதில் மக்களே நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் உங்கள் கிராமத்தையும் முன்னேற்றுவது பற்றிச் சிந்தியுங்கள் தற்போது கிடைத்துள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் உங்கள் ஊரை முன்னேற்றக் கூடிய வருக்கு மட்டும் வாக்களித்து சிறந்த உள்ளூராட்சி மன்றங்களை உருவாக்குங்கள். அது உங்களின் பொறுப்பாகும் - என்று குறிப்பிட்டார்.

**கூட்டமைப்பின் குழப்பம்**

இந்த முறை வடக்கிலும் கிழக்கிலும் அதிக முரண்பாடுகளுடன் தேர்தலில் இறங்கும் கட்சி கூட்டமைப்பாகும். வீட்டுச் சின்னத்தில் இதுவரை தேர்தல்களில் போட்டியிட்ட அந்தக் கட்சியின் தலைவராக இரா. சம்பந்தன் இருக்கிறார். ரெலோவும், புளொட்டும் புதிய கூட்டுக்குள் புகுந்துவிட்டன. இதனால் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் கூட்டுக்கள் பிரிந்திருப்பதால் அவரது பதவி அந்தரித்து நிற்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து தேர்தலுக்காகப் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சிறிகாந்தா, ஜனநாயகப் போராளிகள் என்கிற விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் எனப்பலர் களமிறங்கியுள்ளனர். அவர்கள் தமது தேர்தல் விளம்பரங்களில் தமிழத் தேசியக் கூட்டமைப்பினர் பிரதிபலிக்கும் சிவப்பு, மஞ்சள் வர்ணப் பின்னணியிலான கொடியில் கூட்டமைப்பினரின் வீட்டுச் சின்னத்துக்குப் பதில் குத்துவிளக்கை குத்தியிருக்கிறார்கள். அவ்வளவுதான் இந்தப் புதிய கூட்டின் வேறுபாடு. இது கூட்டமைப்பை இதுவரை காலமும் ஆதரித்து வந்த மக்களைக் குழப்புவதாக இருக்கும்.

வீடா, குத்துவிளக்கா என்ற கேள்வியே தற்போது பேசுபொருளாகியிருக்கிறது. இதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கிருந்த எச்ச சொச்ச ஆதரவுத் தளமும் ஆட்டம் காணத் தொடங்கியிருப்பதையே இது காட்டுகிறது. இந்த முறை தேர்தலில் வழமைக்கு மாறாகக் கட்சிகள் சார்பாகவும் சுயேச்சையாகவும் அதிக வேட்பாளர்கள் களமிங்கியிருப்பதால் கிராமங்களில் உறவுக்காரர்களுக்கிடையில் யாருக்கு வாக்களிப்பது என்ற சிக்கல்களும் மோதல்களும் ஏற்பட்டிருக்கின்றன. இது தேர்தலுக்கு அப்பால் இதுவரை கிராமங்களில் பேணப்பட்ட ஒற்றுமையைச் சிதைத்திருக்கிறது.

**மணிவண்ணன் அணி**

கஜேந்திரகுமார் அணியிலிருந்து பிரிந்து தாமாக மிகவும் வேகமாக இயங்கி வந்த மணிவண்ணன் அணியும் எந்தக் கட்சியுடம் சாராது சுயேச்சையாகக் களமிறங்கியிருந்தால் ஓரளவுக்கு அரசியலில் நின்று பிடித்திருக்க முடியம். இனிவரும் வடமாகாணசபைத் தேர்தலில் மணிவண்ணன் பிரகாசமாக ஒளிரும் வாய்ப்பும் இருந்தது. ஆனால், விக்னேஸ்வரனுடன் கூட்டுச் சேர்ந்து மான் சின்னத்தில் தேர்தலில் போட்டியிடுவதற்கு மணிவண்ணன் முடிவு எடுத்தது என்பது அரசியல் தற்கொலைக்கு ஒப்பானது.

யாழ்ப்பாண மாநகர முதல்வராக இருந்தபோது மணிவண்ணன் மேற்கொண்ட அபிவிருத்தி வேலைகளைக்

கைதட்டி வரவேற்றாலும் அதற்காக மணிவண்ணனுக்கு எதிர்வரும் தேர்தலில் மக்கள் வாக்களிக்கப் போவதில்லை.

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஆளுக் காள் பிடுங்குப்படும் நிலையில் இவற்றுக்கெல்லாம் மாறாகத் தொன்பகுதிக் கட்சிகளும் சுயேச் சையாகக் களமிறங்கியுள்ளவர் களும் வெல்வதற்கு வாய்ப்புகள் அதிகமுள்ளன. ஆனால், சபையை நடத்தக்கூடிய விட்டுக் கொடுப்பும் சமூக அக்கறையும் உள்ளவர்க ளையே மக்கள் கவனமாகத் தெரிவு செய்யவேண்டும். தகுதி யற்ற தலைவர்களால் நாடு நாசமாய்ப் போவதில்லை. தகுதி யற்ற தலைவர்களைத் தெரிந்தடுக் கும் மக்களாலேயே அந்த நாடு நசமாய்ப் போகிறது என்ற கருத் தைத் தமிழ் வாக்காளர்கள் கவனத்தில் எடுத்துச் செயற்பட வேண்டும்.

# "மருத்துவர் இலவசம் மருந்துக்குப் பணம்"

## இலவச மருத்துவத்தின் பரிதாப நிலை...!

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மருந்துகள் இல்லாத நிலையில் மருத்துவ சிகிச்சைகள் முடங்கத் தொடங்கியிருக்கின்றன. மருந்து மாத்திரைகள் இல்லாமையால் நோயாளர்கள் மூச்சிழுப்ப தையும் நோயால் அவதிப்படுவதையும் பார்த்து மருத் துவர்கள் கலங்கி நிற்கிறார்கள். கையறு நிலையில் அவர் களின் பணி தொடர்கிறது. இலசவ மருத்துவம் என்று அரசு இதுவரை காலமும் வழங்கி வந்த மக்களுக்கான மருத்துவசேவை அதே பெயரில் தொடர்ந்தாலும் யதார்த்தத்தில் இலவசங்கள் குறைந்துவிட்டன.

அரச மருத்துவமனைகளில் மருந்துப் பொருள்கள், சிகிச்சை உபகரணங்கள் என அனைத்துப் பொருள்களும் அறவே கையிருப்பில் இல்லாமல் போய்விட்டன.

பிரதாபன்

இந்த இக்காட்டான சூழலில் தொற்று நோய்கள், விபத்துக்கள், திடீர் நோய்கள், கர்ப்பவதிகள் கவனிப்பு என எந்த நோய் களுக்குச் சிகிச்சையளிப்பதற்கும் மருத்து கள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இல வச மருத்துவம் என்பது இனி இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. பெயரளவில் இலவச மருத் துவம் என்று சொன்னாலும் அது மெல்ல மெல்ல நீங்கி மாதக் கணக்காகிவிட்டது.

"முட்டு இழுத்துச் சுவாசிக்கக் கடும் கஸ்ரமா இருந் துது. அப்ப பின்னப் பெரியாஸ்பத்திரிக்குப் போனன். அவசர சிகிச்சைப் பிரிவில வைச்சிருந்து பார்த்துப்போட்டு வாட்டுக்கு விட்டிச்சினம். டொக்டர்மார் நல்ல வடிவா சோதிச்சினம். ஆனா அவையிட்ட மருந்துகள் ஒண்டும் இல்லை. அவசர சிகிச்சைப்பிரிவில வைச்சு எனக்குக் குளுக்கோஸ் ஏத்தினவை. குளுக்கோஸ் ஏத்திறதுக்குக் கையில ஊசிகுத்திச்சினம். அதுக்கு ஒட்டுறதுக்குப் பிளாஸ் ரர் இல்லையெண்டு சொல்லி ஒரு துண்டுப் பிளாஸ்ரர் ஒட்டிச்சினம். பிறகு வெளியில வாங்கித் தரச்சொல்லிச் சினம். என்னை வாட்டுக்கு விட்டப்பிறகு மகன் பார்க்க வந்தான். அவனிட்டச் சொல்லிப் பிளாஸ்ரர் வாங்கிவரச்




சொன்னன். கையில ஒட்டுற ஒரு சின்னத்துண்டுப் பிளாஸ்ரின் விலை ஒரு சென்ரிமீற்றர் 8 ரூபாயாம். 80 ரூபாக்கு ஒரு துண்டு வாங்கிக்கொண்டு வந்து தந்தான். அவசர சிகிச்சைப் பிரிவில வைச்சுப் பிளாஸ்ரர் ஒட்டி னாலும் வாட்டிலை இருக்கிறவையிட்ட எழுதிக்குடுத்து

**வாட்டிலை வந்து செக் பண்ணிப் பாத்த டொக்டர் மருந்து எழுதித் தந்திட்டுப் போனார். தங்களிட்ட மருந்து இல்லையெண்டு ஒவ்வொரு தடவையும் டொக்டர் வெளியிலை வாங்கித் தரச் சொல்லி எழுதித்தான் தருகினம்**

வெளியில வாங்கித்தான் சிகிச்சை நடக்கு. ஒட்டுற பிளாஸ்ரரின்ற அள வும் சிறுத்துப்போச்சு சில ஆக்களுக் குச் சின்னதா ஒட்டினதால ஒண்டு ரெண்டு நாளிலையே அது உரிஞ்சு தொங்கிக் கொண்டிருந்ததையும் பாத்தன். ஆஸ் பத்திரியிலை மருந்துச் சாமானுகளுக் குத் தட்டுப்பாடாம் என்று சொல்லி மருந்துகளும் வெளியிலை வாங்கித் தரச்சொல்லி டொக்டர்மார் எழுதித் தந்தவை. பார்க்க வந்த மகனிட்டக் குடுக்க அதைப் பாமசியிலை வாங்கிக் குடுத்துத்தன். அதைத் தான் எனக்குத் தந்தவை. அவையிட்ட மருந்துகள் ஒண்டுமில்லை. சரியாச் சிரமப்படு கினம். ஆனால் அந்த ரைமுக்கு ரைம் வந்து பார்த்துச் சிகிச்சையளிக் கினம். மருந்தை வெளியிலை காசு குடுத்து வாங்கிக்குடுத்தா டொக்டர்மார் வந்து பார்த்துச் சிகிச்சை நடக்கு..."

மானிப்பாயைச் சேர்ந்த துரை ஐயாவின் அண்மைக்கால யாழ்ப்பாண மருத்துவமனை அனுபவம் தான் இது. அவர் சொல்வதைப்போல மருத் துவம் இலவசம் என்பதைவிட மருந் துக்குப் பணம் - மருத்துவர்கள் இல வசம் என்கிற நிலைதான் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இருக் கிறது.

மருத்துவர்களை இலவசமாகச் சிகிச்சைக்கு அமர்த்துவதே இந்தக் காலத்தில் பெரும்பாடாக இருப்பதால் இப்போதைக்கு ஏழைகளுக்கு இந்த நிலை பரவாயில்லை என்கிற ரகத்தில் தான் இருக்கிறது. தனியார் மருத்து வமனைகளில் மருத்துவர்களுக்கான கட்டணம் எகிறிக் கிடக்கிறது. மருத்து வரை முன்பதிவு செய்வதற்கும் அவர் வழங்கும் சிகிச்சைக்கும் பெரும் பணத்தைக் கோருகிறார்கள். எனவே யாழ்ப்பாண மருத்துவமனையில் மருத்துவர்களாவது இலவசமாகக் கிடைப்பது ஏழைகளுக்கு இப்போ தைக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடியதுவே. ஆனால், மருத்துவமனையில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டுக்குப் பின்னர் மருந்தகங்களில் மருந்துகளின் விலை சடுதியாக அதிகரித்திருக்கிறது என்கிற ஆதங்கங்களும் இருக்கின்றன.

"வாட்டிலை வந்து செக் பண்ணிப் பாத்த டொக்டர் மருந்து எழுதித் தந் திட்டுப் போனார். தங்களிட்ட மருந்து இல்லையெண்டு ஒவ்வொரு தடவை யும் டொக்டர் வெளியிலை வாங்கித் தரச் சொல்லி எழுதித்தான் தருகினம். அவை எழுதித் தந்த மருந்தைப்போய் ----- பார்மசியிலை (மருத்துவம னைக்கு முன்னாலுள்ள பிரபல மருந் தகத்தின் பெயரைச் சொன்னார்) போய்க் கேட்டால், பவுணுக்கு விலை சொல்லுற மாதிரிச் சொல்லுகினம். ஆரம்பத்திலை ஓரளவுக்கு விலை வாங்கக்கூடிய மாதிரி இருந்தாலும் பிறகு புது ஸ்ரொக் விலை கூடி வந்தி ருக்கு எண்டு சொல்லுகினம். ஆஸ்பத் திரிக்காரர் எல்லாரும் வெளியிலை போய் எழுதி மருந்து வாங்கிறதப் பாத்திட்டு விலையைக் கூட்டுகி னமோ... அல்லது உண்மையாவே மருந்துகளின்ர விலை கூடிப்போச்சோ தெரியேல்ல. இந்தக் காலத்தில எல் லாச் சாமானுகளின்ர விலையும் கூடித்தானே இருக்கு மருந்துகளின்ர விலையும் கூடத்தானே செய்யும்... ஆனால் அந்தப் பாமசி தவிர வேற சின்னச் சின்னப் பாமசியலிலை மருந்துகள் கொஞ்சம் விலை கூடத் தான் எண்டு மருந்து வாங்கிற சனங் கள் சொல்லிச்சுதுகள்...." இது தெல் லிப்பளையைச் சேர்ந்த பாமிலாவின் ஆதங்கம்.



கர்ப்பவதியான அவர் அண்மைக் காலத்தில் மருத்துவமனைச் சிகிச்சை யில் மருந்துக்குப் பெரும் பணத்தைச் செலவழித்த ஆதங்கத்தில் மருத்துவ மனையைவிட்டு வெளியேறும் வாச லில் நின்று இப்படிக் கொட்டித் தீர்த் தார்.. "இனி என்ன வருத்தம் எண் டாலும் இஞ்சாலைப் பக்கம் வாற தைக் குறைக்க வேணும்" என்றும் அழுத்தமாகச் சொன்னார். போதாக் குறைக்கு, "இந்த இக்கட்டான சூழ லில் தேவையில்லாமல் நோய்வாய்ப் படுவதையும் (அவர் சொன்னது கர்ப்பவதியாதலைத் தள்ளிப்போடு வது நல்லது என்ற கோணத்தில்) விபத்துகளுக்கு முகம்கொடுப்பதை யும், தவிர்க்கவேண்டும்" - என்று அறி வுரையும் கூறிச் சென்றார். மருந்தில் லாமல் இறக்கும் நிலையை யாராவது விரும்புவார்களா என்ன...? மருந்துக்கு அதிக பணம் செலவளிக்க ஏழைகளால் முடியுமா என்ன...? ஆக, நம்பிய அரசு நட்டாற்றில் விட்டுவிட்டது என் பதுதான் இங்குள்ள யதார்த்தம்....!

# ஏன்...? அப்படி...?

நட்சத்திரா

44



## குழந்தை பிறந்தால் தொடக்கு (துடக்கு)

குழந்தைப் பிறப்பு நிகழ்ந்த வீட்டுக்குச் செல்வோர் உணவுண்பதை, நீர் அருந்துவதைத் தவிர்ப்பதைத் தற்போதும் காணலாம். அப்படி அருந்வோர் கோவில்களுக்குப் போக முடியாது என்பர். அதைவிட குழந்தைப் பிறப்பு நிகழ்ந்த வீட்டுக்காரர் கோயில், குளம், சுப - நற்காரியங்கள் என எந்த விடயங்களிலும் கலந்துகொள்ளாது தவிர்ப்பர். இவற்றுக்கெல்லாம் காரணமாகத் தொடக்கு (துடக்கு) என்பதை முன்னிறுத்துவர். இந்த நடைமுறை எவ்வாறு தோன்றியது. இதன் பின்னாலுள்ள உண்மைதான் என்ன....?

மருத்துவமனைகள் இல்லாத பழங்காலத்திலும், மருத்துவமனைகள் அபிவிருத்தி செய்யப்படுவதற்கு முன்னரும் பிரசவத்தின்போதும் பிரசவத்தின் பின்னரும் தாய், சேய் சாவுகள் மிக அதிகம் நிகழ்ந்தன. அந்தக் காலங்களில் மருத்துவ சாதனங்கள், மருந்து வசதிகள் இல்லாமலிருந்தன. உள்ளூர் மருத்துவிச்சிகளே பிரசவம் பார்த்தனர். இதனால் தாய், சேய் நலனைக் காக்கும் பொருட்டுக் குழந்தை பிறந்தவுடன் தாயையும் சேயையும் பராமரிப்பதற்காகப் பெண்ணின் குடும்பம், பெண்ணின் சகோதரர்கள், கணவன், அயலவர்கள் எனப் பலரும் குறைந்தது ஒரு மாத காலமாவது தாய் - சேய் பராமரிப்பில் கவனம் செலுத்தவேண்டியிருந்தது. அதற்காகவே தொடக்கு என்ற விடயம் உருவாக்கப்பட்டது. தொடக்கு என்பதால் பொது விடயங்களில் இந்த வீட்டவர்கள் கலந்து கொள்வது தவிர்க்கப்பட்டது.

தாய் சேய்க்கு ஏதாவது உடல் நலக்குறைவு ஏற்பட்டால் உடனடியாக மாட்டு வண்டிலில் ஏற்றிக் கொண்டு வைத்தியசாலைக்குக் செல்லவேண்டியிருந்ததால் தொடக்கு என்ற விடயத்தைக் காரணம் காட்டி ஆண்கள் வீட்டில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

பிறந்த குழந்தையைப் பிரத்தியேகமாகக் கவனிக்கும் பொறுப்பு தாயின் சகோதரனுக்கு அதிகம் இருந்தது. இதுதான் பின்னாளில் எல்லாச் சடங்குகளிலும் தாய் மாமனின் பங்கு அதிகமாக இருக்கக் காரணமானது. தற்போதும் தாய் மாமனை வைத்துச் சடங்குகளைச் செய்யும் முறை தொடர இதுவே காரணம். தற்போதைய நிலையில் முன்னோர்கள் கூறிய தொடக்கோ அதற்கான தேவையோ இல்லாது போய் அவை வெறும் சடங்காக மட்டுமே பின்றபற்றப்பட்டு வருகின்றன. இதுதான் தொடக்கு என்பதன் பின்னாலுள்ள விடயம்.

# ஏறுகோள் எனும் ஜல்லிக்கட்டு



பெருமாள் முருகன்

தைப் பொங்கலை ஒட்டித் தமிழ்நாட்டில் பல இடங்களில் ஜல்லிக்கட்டு நடைபெறுகிறது. ஜல்லிக்கட்டு என்னும் ஏறு தழுவுதலுக்கு நீண்ட வரலாறு உண்டு. சங்க இலக்கிய நூல்களில் ஒன்றான 'கலித்தொகை'தான் இதை விரிவாகப் பதிவு செய்துள்ள முதல் நூல். காடும் காடு சார்ந்த பகுதியுமாகிய நில அமைப்பைக் கொண்ட முல்லை நிலத்தில் ஏறு தழுவுதல் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

முல்லை நிலத்தில் வாழ்வோர் ஆயர்கள். ஆடு மாடு வளர்த்தலே அவர்களது முதன்மைத் தொழில். ஆகவே கலித்தொகையின் 'முல்லைக் கலி' பகுதியில் ஏறு தழுவுதல் காட்சிகள் காணப்படுகின்றன. சோழன் நல்லுருத்திரன் பாடிய முல்லைக்கலியில் பதினேழு பாடல்கள் உள்ளன. அவற்றில் முதல் ஏழு பாடல்கள் ஏறுதழுவுதலை விவரிக்கின்றன. இப்பாடல்கள் மூலம் பல்வேறு செய்திகள் நமக்குத் தெரியவருகின்றன.

### முல்லைக்கலியின் குறிப்புகள்

இன்று 'ஜல்லிக்கட்டு' என்று பரவலாகவும் 'மாடுபிடி', 'எருதுக்கட்டு', 'காளை அணைதல்' உள்ளிட்ட பல பெயர்களிலும் அழைக்கப்படும் இவ் விளையாட்டை முல்லைக்கலி 'ஏறு கோள்', 'ஏறு கோடல்' என்று குறிப்பிடுகின்றது. 'ஏறு தழுவுதல்' பிற்கால வழக்கு. 'நல்லேறு கொள்பவர்', 'ஏறுகோள் சாற்றுவார்', 'பொதுவரும் ஏறு கொண்டு', 'கொலையேறு கொள்பவர்', 'கொலையேறு கொள்வான்', 'கொண்ட ஏறு எல்லாம்', 'கொலையேறு கொண்டேன் யான்', 'நல்லேறு கொண்ட பொதுவன்', 'கொல்லேறு கோடல்' என இவ்விளையாட்டைக் குறிப்பிடும் தொடர்கள் முல்லைக்கலியில் காணப்படுகின்றன.

தம்மைப் பிடிக்கவிடாமல் ஏறுகள் போராடியதை 'நீள் மருப்புறச் சாடிக் கொள இடம் கொடவிடா நிறுத்தன ஏறு' என்கிறது ஐந்தாம் பாடல். அதிலே இப்படி ஒரு விவரிப்பும் வருகிறது:

**கொள்வாரைக் கொள்வாரைக்
கோட்டுவாய்ச் சாக்குத்திக்
கொள்வார்ப் பெறாஅக் குரூஉச்
செகில் காணிகா.**

இப்பாடல்களில் எங்குமே 'ஏறு தழுவுதல்' இல்லை. ஏறு கொள்ளுதல் தான். இவற்றில் 'ஏறு கோடல்' என்பதும் 'ஏறு கோள்' என்பதும் சிறந்த வழக்காகத் தோன்றுகிறது. புறப்பொருள் வெண்பா மாலை நூலில் வெட்சித் திணைக்குரிய துறைகளுள் ஒன்றாக 'ஆகோள்' உள்ளது. அந்நூலின் ஒழிபுப் பகுதியில் ஏறு தழுவுதல் பற்றி வரும் பாடலுக்கு 'ஏறுகொள் வென்றி' என உரையாசிரியர்கள் தலைப்பு தந்துள்ளனர். பாடலில் 'கோவலனே கொண்டான்' என்று வருகிறது.

முல்லைக்கலிப் பாடல்களுக்கு வகுக்கப்பட்ட துறைக் குறிப்புகளில் 'ஏறு தழுவுகின்றமை', 'ஏறு தழுவி', 'ஏறு தழுவினமை' முதலிய தொடர்கள் கையாளப்பட்டுள்ளன. அவற்றையொட்டி உரையாசிரியராகிய நச்சினார்க்கினியரும் 'ஏறு தழுவுதல்' என்றே எழுதியுள்ளார். துறை, உரை ஆகியவையே இயல்பாகி 'ஏறு தழுவுதல்' என்பது இலக்கிய வழக்காக நிலைபெற்றுவிட்டது. ஏறுகோள், ஏறு கோடல் ஆகியவை மிகப் பழைய வழக்கு. அடுத்த கால வழக்கு 'ஏறு தழுவுதல்.'

### நிறமும் ஏறுகளும்

நிறத்தைக் கொண்டு ஏறுகளுக்குப் பெயர் வழங்கும் மரபு இருந்துள்ளதை முல்லைக்கலிப் பாடல்கள் சுட்டுகின்றன. கரிய நிறமுடைய ஏறு 'காரி'; வெண்ணிறமுடையது 'வெள்ளை'; கழுத்துப் பகுதியில் கருமை கொண்டது 'குரால்'; உடலில் ஆங்காங்கே புள்ளிகள் நிறைந்தது 'புகர்'; சிவந்த நிறமுடையது 'சேய்.' இவ்வாறு ஐந்து வண்ணக் காளைகளை முல்லைக்கலி குறிப்பிடுகிறது. இந்தக் காளைகளின் தோற்றமும் செயலும் விரிவாக வருணிக்கப்பட்டுள்ளன. நெற்றியில் சுழி உள்ளதைச் 'சுரிநெற்றி' என்றும் உயர்ந்த திமிலை 'ஏந்து இமில்' என்றும் சொல்கின்றன. வெண்கால், செம்மரு, பல்பொறிக் கடுஞ்சினம் என்றெல்லாம் காளைகளின் இயல்பை

இப்பாடல்கள் காட்டுகின்றன.

ஏறுகள் தம் கால்களால் நிலத்தைப் பறித்துப் புழுதி கிளப்பும். கொம்புகளால் மேடுகளைக் குத்தித் தகர்க்க முயலும். தமக்குள் சண்டையிட்டுக்கொள்ளும். மண்டியிட்டுப் போரிடும். இத்தன்மைகளையும் பாடல்கள் காட்டுகின்றன. அவற்றைப் பிடிக்கவரும் வீரர்களைக் குத்திச் சிதைக்கும் காட்சிகளும் உள்ளன. குத்தி வயிற்றைக் கிழித்துக் குடலைக் கொம்பில் சூடிக்கொண்டு ஓடும் ஏறுகளைக் காண்கிறோம்.

துச்சாதனனின் நெஞ்சைப் பிளந்த வீமன், கூற்றுவனைக் கொல்லும் சிவபெருமான், சிகண்டியின் தலையைத் திருகிக் கொன்ற அசுவத்தாமன் உள்ளிட்ட புராணப் பாத்திரங்கள் ஏறுகளுக்கு உவமையாகப் பல இடங்களில் சொல்லப்படுகின்றன. ஏறுகளும் போர் அறத்தைக் கடைபிடிக்கும் பண்பு கொண்டவை. எதிர்க்க இயலாமல் கீழே விழுந்துவிட்ட இளைஞனை அவை தாக்குவதில்லை. 'தன் முன்னர் வீழ்ந்தான் மேல் செல்லாது மீளும் புகர்' என்று அதன் போர் அறத்தைப் பாடல் காட்டுகிறது.

ஏறுகளை அடக்கும் இளைஞர்களையும் இப்பாடல்கள் விரிவாக வருணிக்கின்றன. 'பொதுவன்' என்பது முல்லை நில இளைஞனுக்குப் பெயர். நோக்கு அஞ்சான், கதன் அஞ்சான் என அவனது அஞ்சாமை சொல்லப்படுகிறது. பகல் இடக் கண்ணியன், பைதல் குழலன், சுவல் மிசைக் கோல் அசைத்த கையன் என முல்லை நில இளைஞனின் தோற்றம் காட்டப்படுகிறது.

ஏற்றின் கழுத்தைத் தம் கைகளால் வளைத்துப் பிடித்து அடக்க முயல்பவனை 'காளையின் கழுத்தில் சூட்டிய மாலை போல் தோன்றுகிறான்' என்கிறது ஒருபாடல். ஏற்றைத் தழுவிய தம் பிடியை விடாமல் நீண்ட தூரம் செல்பவனைத் 'தெப்பத்தில் அமர்ந்து அதைச் செலுத்திச் செல்பவன் போலத் தோன்றுகிறான்' என்கிறது அதே பாடல். எமனைக் கொன்ற சிவபெருமான், மதியிடை தோன்றும் மரு என்றெல்லாம் பல உவமைகள் ஏறு கொள்ளும் இளைஞர்களைச் சுட்டப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

**முல்லை நில மக்களின் ஏறுகோள்!**

ஏறுகோள் எப்போது நடைபெறும்? குறிப்பான நாளையோ மாதத்தையோ இப்பாடல்கள் சொல்லவில்லை. எப்போதெல்லாம் அவர்களுக்குத் தேவையோ அப்போது உடனே ஏற்பாடு செய்யப்படுகிறது. ஒரு பெண்ணுக்கு உரிய மணமகனைத் தேர்ந்தெடுக்க முடிவுசெய்ததும் ஏறுகோள் நடக்கிறது. பல ஏறுகள் விடப்படுவதாகப் பாடல்கள் தெரிவிக்கின்றன. அதற்குரிய இடத்திற்குத் 'தொழு' என்று பெயர். 'தொழூஉ' என அளபெடையாக வருகிறது. ஓரிடத்தில் 'தொழுவம்' என்றும் உள்ளது. ஆடுமாடுகள் கட்டப்பட்டுள்ள இடத்தைத் 'தொழுவம்' என்பது இன்றும் உள்ள வழக்குத்தான்.

ஏறுகளைத் தொழுவத்துக்குக் கொண்டுவரும் முன் கடவுளை வணங்கி வழிபட்டுள்ளனர். தண்ணீர்த் துறையில் உள்ள கடவுள், ஆலமரத்தின் அடியிலும் மராமரத்தின் அடியிலும் உள்ள கடவுள் ஆகியவற்றை உரிய முறைப்படி வழிபட்ட பிறகு தொழுவத்தில் ஏறுகளை விட்டுள்ளனர். விடும்போது இசை முழங்கியுள்ளது. 'அவ்வழிப் பறை எழுந்து இசைப்ப' எனப் பறை இசைக்கருவி குறிப்பிடப்பட்டுள்ளது. இடி போலவும் முரசு போலவும் மக்கள் ஆரவாரம் செய்துள்ளனர். 'எழுந்தது துகள், ஏற்றனர் மார்பு, கவிழ்ந்தன மருப்பு, கலங்கினர் பலர்' என ஏறுகோள் காட்சி சிறுதொடர்களால் வருணிக்கப்பட்டுள்ளது. 'தகைவகை மிசைமிசைப் பாயியர் ஆர்த்துடன் எதிரெதிர் சென்றார் பலர், கொலை மலி சிலைசெறி செயிரயர் சினம்சிறந்து உருத்தெழுந்து ஓடின்று மேல்' என முடுகிய ஓசையுடனான காட்சிச் சித்திரம் வரையப்பட்டுள்ளது.

ஏறுகோள் நடக்கும் தொழுவில் பார்வையாளர்கள் இருந்தனரா? ஆம், முல்லை நில மக்கள் ஆண்களும் பெண்களுமாகக் கூடிக் கண்டுகளித்தனர். ஏறுகளால் அவர்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அமர்ந்து காண 'மாடங்கள்' கட்டப்பட்டிருந்தன. தன் மனதுக்கு உகந்த காதலன் ஏற்றைத் தழுவும் காட்சியைக் காண வராமல் கவலை கொண்டிருந்த தலைவியருக்குத் தோழிகள் ஓடிச் சென்று தகவல் தெரிவித்தனர்.

**ஏறுகளைத் தொழுவத்துக்குக் கொண்டுவரும் முன் கடவுளை வணங்கி வழிபட்டுள்ளனர். தண்ணீர்த் துறையில் உள்ள கடவுள், ஆலமரத்தின் அடியிலும் மராமரத்தின் அடியிலும் உள்ள கடவுள் ஆகியவற்றை உரிய முறைப்படி வழிபட்ட பிறகு தொழுவத்தில் ஏறுகளை விட்டுள்ளனர்.**

தலைவன் ஏற்றை வென்ற தகவலே அது. தான் மனதில் நினைத்திருந்தவனே வெல்ல வேண்டும் என்று பெண்கள் எதிர்பார்த்திருந்தனர். தன் விருப்பத்துக்குரியவன் எப்போது ஏறுகொண்டு தன்னைத் திருமணம் செய்துகொள்வான் எனக் கவலைப்பட்ட தலைவியரையும் ஏறுகோளில் ஈடுபடாமல் தள்ளிப்போடும் தலைவர்களையும் காண முடிகிறது.

**வெற்றியாளருக்கான பரிசு என்ன?**

ஏறு கொண்டவனைத் தவிர வேறொருவனைத் திருமணம் செய்து கொள்வதில்லை என்னும் வழக்கம் முல்லை நில மக்களிடம் நிலவியுள்ளது. ஏறு கொள்ள அஞ்சுபவனை அடுத்த பிறவியிலும் மணம் செய்து கொள்ள ஆயமகள் விரும்ப மாட்டாள் என வன்மையாக ஒருபாடல் தெரிவிக்கிறது. திருமணமும் ஏறுகோளும் இணைந்த விழுமியம் கொண்டவர்கள் முல்லை நில மக்கள். முல்லைக்கலியும் ஏழு பாடல்களும் இவையிரண்டையும் இணைத்தே பேசுகின்றன.

இன்று ஜல்லிக்கட்டில் வெற்றி பெறுபவர்களுக்குக் கார், இருசக்கர வாகனம், பாத்திரங்கள், தங்கக் காசுகள் எனப் பல பொருட்கள் பரிசாக வழங்கப்படுகின்றன.



**கதிரேசன் காத்தவராயன்**

# பம்மாத்தெண்டது இதுதானோ?

அதிலை கோயிலடிக்குப் போயிருந்தன். அங்கை மயிலர், முருகேசர், சம்பர், கனகர் இருந்து கதைச் சுக்கொண்டிருந்தினம். நானும் போய்க்குந்தினன். 'எந்த நாட்டாலை வாறியள் மயிலண்ணை? ஆளையே காணக்கிடைக்கிறேல்லை...' எண்டு நான் தொடக்க 'நாங்களும் உதைத்தான் கேட்டனாங்கள்' எண்டு சம்பர் சொன்னார். மேள்வீட்டோடை கிளிநொச்சியிலை எண்டு அறிஞ்சனாங்கள்தான் எண்டாலும் கதைக்க வல்லே வேணும்.

'என்னப்பா நடக்குது இஞ்சை? ஏதாலும் விளங் கூதோ?' எண்டார் கனகர் ஒரு எதிர்பாப்போடை. 'எதைக் கேக்கிறாய் கனகு? கனக்கவல்லே கிடக்குது... எதை யெண்டு சொல்லுறது?' எண்டார் முருகேசர். 'நாடு போகிற போக்கு...பெற்றோல் செற்றுகளிலை திரும்ப வும் திருவிழாவல்லே...' எண்டு சம்பர் சொல்லிக் கொண்டிருக்க 'அடிபிடியில்லை.. மைல் கணக்கிலை வரிசை நீளயில்லை... நாலு பேர் கூட்டமாய் நிண் டால் தாங்களும் போய் நிக்கிறது எங்கடை வழமை தானே..' எண்டன்.

'உண்மைதான்... எங்கடையாக்களுக்கு அற் வான்ஸ் பிறெய்னல்லே? ரஸ்யா-உக்ரெயின் சண்டை நிலவரத்தைப் பாத்ததாலை கொஞ்சம் கூட யோசிச்சிட் டினம்போலை' எண்டு சிரிச்சார் மயிலர். 'மயிலண்ணை சொன்னதிலை பாதிதான் சரி... அற்வான்ஸ் மூளை யெண்டது கிடக்கோ?' எண்டு முருகேசர் கேட்டார். நான் 'ஏன் முருகேசு?' எண்டு கேட்டன்.

'ஏனோ? எதையெண்டாலும் முதலிலையே யோசிச் சுச் செய்திருக்கிறமோ?... இப்ப பாருங்கோவன் நடக் கிற கூத்தை... உந்த ஏ.எல். சோதினையை நடத்த வேணுமெண்டது எப்பவோ தெரியுமல்லே... அது கள் குழம்பிக் குழம்பிப் படிச்ச பிள்ளையளல்லே... கறன்றைக் கட்பண்ணிறாங்கள்... அது ஆரன் சொல் லித்தான் அறியிற விசயமோ? இப்ப பிடுங்குப் படுகி னம்... இவை முடிவெடுக்கிற நேரம் சோதினை

ஆனால், முல்லைக்கலி காட்டும் ஏறுகோளில் திருமணமே பரிசு. தன் காதலன் ஏற்றை வெற்றிகொண்டு தன்னைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்னும் எதிர்பார்ப் புடைய பெண்களின் கூற்றாகவே இப்பாடல்கள் புனையப் பட்டுள்ளன. தலைவி கூற்று, தோழி கூற்று ஆகியவை பாடல்களின் சொல்முறை.

ஏறுகோள் நடக்கும்போது சண்டைகள், தகராறுகள் உண்டா? அவையில்லாமல் எந்த விளையாட்டும் இல்லை. பலவகையான விதிகளுக்கு உட்பட்ட இன்றைய சர்வதேச விளையாட்டுப் போட்டிகளிலேயே சச்சரவுகள் இருக்கின்றன என்னும்போது அக்காலத்தில் இல்லாமல் இருந்திருக்குமா? ஒரே ஒரு சச்சரவை மட்டும் முல்லைக்கலி காட்டியுள்ளது. ஒரு பெண்ணுக்குரிய ஏற்றை இளைஞன் ஒருவன் அடக்கி வெற்றி கொண்டான். ஆனால், அப்பெண்ணின் வீட்டார் அவ்வெற்றியை ஏற்றுக்கொள்ளவில்லை. அவனோடு சண்டையிட்டனர்.

வென்றவனைப் பாராட்டுவதை விட்டுவிட்டு அவனை ஏன் பகைத்துக்கொள்கின்றனர் என அப்பெண் கேட்கிறாள். அவ்வீரன் ஏறு கொண்டதை வீறு மிக்க சொற்களால் 'மலர் மலி புகலெழ அலர்மலிர் மணிபுரை நிமிர்தோள் பிணைஇ, எருத்தோடு இமிலிடைத் தோன்றினன், தோன்றி வருத்தினான் மன்ற அவ்வேறு' என அப்பெண் சொல்கிறாள். அவன் அடக் கியபோது அந்த ஏற்றுக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று.

ஒருவேளை விதிமுறைகளை மீறி அவன் அச்செயலில் ஈடுபட்டிருக்கலாம். அல்லது அவனை அவர்களுக்குப் பிடிக்காமல் போயிருக்கலாம். ஆகவே பிரச்சினை உண் டாக்கினர். அவனை 'நல்லவன்' என்று அப்பெண் சொல்கி றாள். தன்னை அவன் திருமணம் செய்துகொள்ள ஏதேனும் தடை ஏற்படுமோ எனவும் அஞ்சுகிறாள். 'எவன்கொலோ ஏறுடை நல்லார் பகை?' என்று வெகுளியாகக் கேட்கிறாள்.

**வாசிப்புக்கேற்ற முல்லைக்கலி**

முல்லைக்கலிப் பாடல்களைப் பாடியவர் சோழன் நல்லு ருத்திரன். ஆனால், பாடல்களில் பாண்டிய மன்னனே குறிப் பிடப்படுகிறான். பாண்டியனை வாழ்த்துவதும் நடக்கிறது. மதுரை, மதுரை சார்ந்த ஊர்களில் இன்றும் ஜல்லிக்கட்டு பிரபலமாக இருக்கிறது. பிற பகுதிகளில் நடைபெற்றாலும் மதுரைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

அக்காலத்திலிருந்தே பாண்டிய நாட்டுக்கும் ஜல்லிக்கட் டுக்கும் தொடர்பு இருந்திருக்கிறது என முல்லைக்கலிப் பாடல்களால் தெரியவருகிறது. 'புலியொடு வில் நீக்கிப் புகழ் பொறித்த கிளர்கெண்டை வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்' எனவும் 'ஒல்கா உரும் உறழ் முரசின் தென்னவன்' எனவும் பாண்டிய மன்னன் குறிக்கப் படுகிறான். அவன் வெற்றிபெற வேண்டும் என வாழ்த்து வதும் ஒருபாடலில் இருக்கிறது.

இவ்வாறு ஏறுகோள் எனப்படும் ஜல்லிக்கட்டு தொடர்பான பல செய்திகளையும் காட்சிகளையும் வருணனைகளையும் உட்கொண்ட முல்லைக்கலியின் ஏழு பாடல்களும் தொன் மையான பண்பாட்டு வரலாற்றுக்கு முக்கியமான சான்று களாகத் திகழ்கின்றன. உரையாடலுக்கு ஏற்ற கலிப்பாவில் இப்பாடல்கள் பாடப்பட்டிருப்பது விரிவான பதிவுகளைச் செய்ய வாகாக இருந்திருக்கும் எனத் தோன்றுகிறது. இப்பாடல்கள் கொண்டிருக்கும் விழுமியங்களையும் பண் பாட்டையும் அறிவதற்கு மட்டுமல்ல, செறிவான சொற்களால் படைக்கப்பட்டுள்ள அவற்றைச் சுவைத்து மகிழ்வதற்கும் ஒருமுறை வாசித்துப் பார்க்கலாம்.

மறுமொழி வந்திடும்..' எண்டார் முருகேசர். 'முருகேசு சொல்லுறதிலையும் பாருங் கோவன் மனிசரைப் பைத்தியக்காறராக் கிறாங்கள்... சோதினைக் காலத்திலை பவர்க்கட் இல்லை எண்டாங்கள்... கட் பண்ணிறது நிக்கயில்லை... மனித உரிமை அமைப்புக் கேட்டதுக்கு அவங்க ளுக்கும் நிப்பாட்டமாட்டம் எண்டவங் களாம்.. அவங்களையும் ஏமாத்தியாச்சு...' எண்டார் மயிலர். 'அவங்களும் அரசாங் கத்திட்டை ஏமாந்து பழகின ஆக்கள் தானே?' எண்டார் கனகர்.

'அதுகள் கிடக்கட்டும்... இப்ப உதவி யில்லாத தனிச்ச ஆக்களுக்குக் குடுக்கிற நிவாரணத்தை என்னண்டு சொல்லப்போ றியள்?' எண்டு கேட்டார் முருகேசர். 'கடு மையான மூளைசாலியளின்ரை திட்ட மல்லே அது' எண்டன் நான். சிரிச்சினம். 'தனிய இருக்கிற உதவியில்லாத வீடில்லாத ஆக்களுக்குக் குடுக்கிற உதவியையல்லே சொல்லலுகிறியள்?' எண்டு கேட்டார் சம்பர். தம்பர் வந்து சேந்து கொண்டார்.

'ஓஓஓ... அதைத்தான் என்ன கதிரே சண்ணை? அய்ம்பது கிலோ அரிசி.. இரு வத்ஞ்சு கிலோ பருப்பு.. அய்ஞ்சு எண்ணை... தேவைதானே அதுக்கென்ன இப்ப?' எண்டு தொடங்கினார் தம்பர். 'அடேயப்பா தம்பா... ஒரு ஆளுக்கு உந்தளவு சாமா னையும் ஒண்டாக் குடுத்தால் வைச்சிருந்து தின்னக் கிடக்குமே உதுகள்? புழுப் பிடிச்சிடுமல்லே? கொஞ்சமெண்டாலும் யோசிக்க வேண்டாமோ?' எண்டார் கன கர். 'அதுதானே' எண்டார் மயிலர்.

'அது கிடக்க பதியிறதுக்கு ஒருநாள்... ரோக்கின் எடுக்க ஒருநாள்... பேந்து சாமான் எடுக்க ஒருநாள்... பாவங்கள் தனிய இருந்து கஸ்ரப்படுகிற வயதுபோன துகள் அலைஞ்சல்லே களைச்சுப் போச் சுதுகள்.... ஏனி சாமான் மூட்டையளை கொண்டு போய்ச் சேர்க்கப் படுகிற பாடு...?...?' எண்டு பெருமூச்சு விட்டார் முருகேசர். 'உதவிக்கெண்டு ஒராளைப் பிடிச்சாலும் இந்த நாளிலை ஆரும் சும்மா போவினமே?' எண்டார் கனகர்.

'அரிசி உச்சவிலை விக்கேக்கையில்லோ குடுத்திருக்க வேணும்... அதுகும் ஒரு அஞ்சு பத்தாய் கிழமைக்கொருக்கா... வீட்டை தேடிப்போய்க் குடுத்திருந்தால் பிரயோசனம்... அதுதான் உதவி... இது உபத்திரவமல்லே.. ஒரேயடியாய்க் குடுத் தால் பாதுகாக்கிறது லேசான வேலையோ?' எண்டு கொதிச்சார் முருகேசர். 'முருகே சண்ணை சரியாச் சொன்னியள்... உந்த... பம்மாத்தெண்டு ஒரு சொல்லு.... கதைக்கி றவையல்லே... அதுதான் இது எண்டு நினைக்கிறன்... அதுதானோ?' எண்டு கொண்டு எழும்பி வந்திட்டன்.

**95**


# எமையறிதல்

## ஐயங்கொண்டான் சுவாமிகள்



கருத்துத்தான் செயலைத் தீர்மானிக்கிறது. செயலில் ஏற்படுகிற தடுமாற்றம் கருத்துத் தடுமாற்றத்திலிருந்தே உருவாகிறது. இங்கே தான் சார்பு என்பது இல்லாமலிருப்பது செய லொன்றின் பெறுபேற்றில் உச்சச்செல்வாக்கைச் செலுத்தவதை அவதானிக்க முடியும். சார்பற்றி ருத்தல் என்பது செயலற்றிருத்தல் அல்லது அடைவை எட்டாதிருத்தல் என்பதாகவே கவ னத்திலெடுக்கப்பட வேண்டும். செயலின் விளைவு எட்டப்படவில்லையெனில் சார்நிலை முயற்சி இடம்பெறத் தவறியுள்ளதென்பதே யதார்த்தமானது.

சார்நிலை என்பது என்ன? கருத்து நிலையில் அல்லது செயல் நிலையில் பின்பற்றுதல் அல்லது தங்கியிருத்தல் சார்நிலையெனக் கொள்ளப்படலாம். கூற்றுகள் நிறுவுதல்கள் கோட்பாடுகளைப் பின்பற்றுதல் அக்கருத்து நிலை சார்பாக எமது செயல்களை ஒழுங்குபடுத் துதல் போன்றவற்றைக் கருத்துச்சார் நிலை யாகக் கொள்ளலாம். இதுவே யதார்த்தத்திற்கு முரணான கருத்துக்களை (கற்பனைகளை) பின் பற்றுதல் என்பது எமது அடைவிற்குத் துணை போகாது. முற்றாக செயலினது அடைவைத் திசை மாற்றவோ தடுக்கவோகூடச் செய்யலாம். இது யதார்த்தமானது. மிக அருமையாக (ஒரு விபத்தாக) அடைவு கிட்டியிருக்கலாம் என்பது புறநடை.




# அயலி

தெய்வ வழிபாட்டின் வழியே உருவான கலாசார, பண்பாட்டு விழுமியங்களின் ஆக்டோபஸ் கரங்கள் பெண்ணை அடக்கியாள ஆணுக்கு கொடுத்திருக்கும் துணிச்சலை 'அயலி' எதிர்க்கும் விதம்தான் இந்த இணையத் தொடரின் கதை.

90களில் விரியும் கதை தமிழ்நாட்டின் புதுக்கோட்டையின் பின்தங்கிய வீரபண்ணை கிராமத்தில் தொடங்குகிறது. பருவமெய்தும் பெண்களுக்கு உடனே திருமணம் என்கின்ற விநோத நடைமுறையால் அங்கிருப்பவர்கள் பலிகாடாவாகின்றனர். அத்துடன் இலவச இணைப்பாக பருவ வயதை எட்டிய பெண்கள், கோயிலுக்குள் நுழையவோ, பள்ளிக்கூடத்திற்கு செல்லவோ, ஊரைத்தாண்டி கூட அடியெடுத்து வைக்கவோ கூடாது போன்ற பழமைவாதத்தில் ஊறிக்கிடக்கிறது கிராமம்.

அந்த மண்ணின் மாணவி தமிழ்ச்செல்வி தான் வயதுக்கு வந்ததை மறைத்து மருத்துவராகவேண்டும் என்ற கனாவுடன் களமாடுகிறார். அவரின் அந்தப் போராட்டம் வென்றதா? ஊர் திருந்தியதா? அந்த ஊர் பெண்களின் நிலை என்ன? என்பதை 8 எபிசோடுகளின் வழியே கிட்டத்தட்ட 4.30 மணிநேர நீளத்தில் சொல்ல முற்பட்டிருக்கும் படைப்புதான் 'அயலி'. ஜீ5 ஓடிடி தளத்தில் காணக் கிடைக்கிறது.

2023ஆம் ஆண்டு 'அயலி'யின் வருகையைப்போல தமிழ் வெப்சீரிஸ்களுக்கு வளர்ச்சியை தந்துவிட முடியாது. காரணம், இன்னும் பருவமடையாத தமிழ் இணையத்தொடர்கள் யாவும், த்ரில்லர் வகையறாக்களில் மாட்டிக்

## பெண் விடுதலையின் தேடல்

இவ்வாறானதொரு சூழல் பற்றி இப்பகிர்வினது முன் பகுதிகளில் நிறையவே பேசியிருக்கிறோம். நாள் கோள் பலன், வினைப்பயன், கடவுள் கிருபை அல்லது சாபம், பேய் பிசாசு பில்லி சூனியம் சகுனம் என நீளமாக பேசியிருக்கிறோம். மீளப் பேசுவது சலிப்பாக இருக்கும் என்பதால் அப்பால் செல்வோம். இவ்வாறான கருத்து நிலையைத் தொடர்தல் என்பது எமது நாட்டினது கல்வி முறைமைக்கு வேண்டுமாயின் பொருந்தி வரலாம். வாழ்க்கைக்கு அல்ல என்பதை கவனத்திற்கொள்வது அவசியம்.

செயல்நிலைச் சார்பு என்பது யதார்த்தமானது. எமக்கான செயல்களுக்கு ஒருவனை அல்லது ஒரு கூட்டத்தைச் சார்ந்திருத்தல், சாதனங்கள் மூலப்பொருட்களைச் சார்ந்திருத்தல் என விரிவுபடுத்தலாம். ஒருவன் அல்லது கூட்டம் சார்ந்து செயலில் இறங்கும்போது அங்கே அந்த ஒருவனது அல்லது கூட்டத்தினது சார்பு கருத்து நிலை சார்ந்து இருக்குமாயின் அக்கருத்துநிலையினது செல்வாக்கு எம்முள்ளும் தாக்கம் செலுத்துமென்பதை கவனத்தில் கொள்வது அவசியமானது.

இணைந்து அல்லது இசைந்து போகும்போது எமது செயற்பாடு கருத்துநிலை சார்பானது ஆகிவிடுகிறது. இணையவோ இசையவோ முடியாத சூழல் ஏற்படும் போது சார்நிலையானது மாற்றங்கொள்கிறது. இந்நிலைப் பாடே கருத்து முரண்பாடெனக் குறிப்பிடப்படுவது. இந்நிலையானது சார்நிலையை இடமாற்றவோ பிறரை எப்போதுமே ஐயுறவோ செய்யுமொரு சூழலை உருவாக்கக்கூடிய ஆபத்தும் உண்டு.

பிறரைச் சார்ந்திருத்தல் என்பதுகூட எதிர்முனைப்பட்ட விளைவுகளைத் தரவல்லது. நிபுணத்துவமுள்ள ஒருவனையோ கூட்டத்தையோ சார்ந்திருந்து ஒரு செயலைச் செய்யும்போது விளைவு துல்லியமாகவும் திருப்தியானதாகவும் இருக்கும். எதிரிடையாக நாம் எமக்கென்றொரு பட்டறிவைப் பெறுவது சாத்தியமற்றுப் போகக்கூடிய அவலமும் ஏற்படலாம். எமது திறமைகளை, இயலுமைகளை பரீட்சித்துப் பார்க்கும் சந்தர்ப்பமானது தவறிப்போவதால் எம்மை நாமே அறிந்துகொள்வது தவிர்க்கப்படுகிறது. இது ஒருவித இயலாமையை அல்லது தாழ்வுச்சிக்கலைத் தோற்றுவித்தும்விடலாம்.

பிறவிடயங்கள் போலவே கவனத்துடன் சார்நிலையும் கையாளப்பட வேண்டியதொன்றே. சாதகம் எதிர் பாதகம், நன்மை எதிர் தீமை என்பன போன்ற எமது இருப்புநிலை சார்ந்து பட்டறிவோடு கையாளப்படுவது அவசியமானது. எமது இருப்புநிலை சார்ந்து என்பது எம்மிடம் கையிருப்பில் உள்ளவைதான். அவைபற்றி நிறையவே முன்பகுதிகளில் பேசிவிட்டோம். சார்நிலை என்பதில் கருத்துச் சார்பானதே அதிகம் செயல்சார்ந்து செல்வாக்குத் செலுத்துகிறது எனப் பேசியிருக்கிறோமல்லவா? அக்கருத்து நிலையைக்கூட எமது மனம்தான் கட்டமைக்கிறது.

இப்போது புரிகிறதல்லவா? இந்த மனம் என்கிற புலப்படா அங்கிதான் எங்குமாகி எல்லாமுமாகி ஆக்கிரமித்துள்ளது. மனம் ஒரு புள்ளியாகவும் வியாபித்த பெருவெளி நிறைப்பதாகவும் என யாதுமாகி நிற்கிறது. மனதை அடக்குதல், கட்டுப்படுத்துதல், நிதானப்படுத்துதல் என ஏராளமானவற்றைச் சொல்ல மட்டுமே எம்மாலும்சரி யாரொருவராலும்சரி முடியும். வடிவம், குணம் என எதையுமே வெளிப்படுத்தாத அறியப்படவே முடியாத மனம் என்கிற விந்தையை அறிந்தால் மட்டுமே செயல்படுத்த முடியுமாக இருக்கும்.

மனம் எங்கேயிருக்கிறது? எப்படிக் கண்டடையலாம்? அதற்கு என்ன செய்யவேண்டும்? சிந்திப்போம்.

கொண்டு முழிக்கும் நிலையில், 'அயலி'யின் பாதை தனித்துவமானது. ராஜேஷ்குமார் நாவலைப் போன்றிருந்த தமிழ் வெப் சீரிஸ்களை, மண்ணின் கதைகளை பேசவைக் கும் இடத்திற்கு 'அயலி' நகர்த்தியிருக்கிறாள். தொடரின் இயக்குநர் முத்துகுமாருக்கு பாராட்டுகள்.

"கோயில இடிச்சிட்டா பொண்ணுங்கள எப்படி கட்டுப் படுத்துவீங்க" என்ற புள்ளியிலிருந்து மொத்த தொடரையும் அணுகலாம். அடிப்படையில் ஒரு பெண்ணைக் கட்டுப் படுத்த கடவுளின் பெயராலான மூடநம்பிக்கையும், பண் பாடும், கலாசாரமும் போதுமானது என்பதையும், இதனை ஆண்கள் எப்படி தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றனர் என்பதையும் அழுத்தமாக பேசுகிறது தொடர்.

"உங்க குடும்ப கௌரவத்தை ஏன் எங்க காலுக்கு இடை யில தேடுறீங்க?", "அப்படி குடும்ப மானம் முக்கியம்னா, அதை நீங்களே தூக்கிச் சுமக்கவேண்டியதுதானே? அதை ஏன் பொம்பளைங்கக் கிட்ட தர்றீங்க?" போன்ற வசனங் கள் மேற்கண்ட கட்டுப்படுத்துதலுக்கு தகுந்த பதிலடி சேர்க் கின்றன.

பெண்கள் ஒடுக்கப்படுவதற்கான க்ரவுண்ட் ரியாலிட் டியை பதிவு செய்துகொண்டிருக்கும் அதேவேளையில், மற்றொருபுறம் அதற்கு தீர்வான பெண் கல்வியை முன் வைக்கும் இடத்தில் மொத்த தொடரின் கனமும் கூடுகிறது. இப்படியான திரைக்கதை அமைப்புக்குள் பள்ளிக்குச் செல்லும் தமிழ்ச்செல்வியும், அவள் வயதையொத்த மற்றொரு பெண்ணின் நிலையையும் காட்சிப்படுத்திருக்கும் விதம் எடுத்துக்கொண்ட கதைக்கருவை இன்னும் ஆழப் படுத்துகிறது. ஒருக்கட்டத்தில் கட்டுப்பாடுகளுக்கு பழகும் பெண்கள் தங்கள் மகள்களை சென்டிமென்ட் ப்ளாக்மெயில் கள் மூலமாக ஆணாதிக்க சிந்தனைக்கு பழக்குவது போன்ற காட்சி அமைப்புகள் யதார்த்தம்.

"உன் அறிவுக்கு எது சரின்னு படுதோ அத செய்", "நம்ம வாழ்க்கையும் சேர்த்து ஆம்பளைங்க தானே வாழ்றாங்க", "ஆம்பளைங்க சேலையத்தான் கட்டணும்" என சொல் லும்போது, "கட்டிக்க.. பொறக்கும்போதே வேட்டியோடவா பொறந்த.." போன்ற வசனங்கள் "நச்" ரகம். தான் வய துக்கு வந்ததை மறைத்து நடைபோடும் தமிழ்ச்செல்வியின் அந்த நடையும், பேருந்து பயணத்தில் வெளியுலகை ரசிக் கும் அவரது தாயின் எண்ண ஓட்டங்களும் இரு வெவ் வேறு வெளிகளை அடையாளப்படுத்துகின்றன.

தமிழ்ச்செல்வியாக அபி நக்ஷத்ரா. மாதவிடாய் கறையை மறைக்க சிவப்பு இங்குடன் நடந்து வரும் காட்சியிலும், அம்மாவிடும் பேசும் உறுதித்தோய்ந்த உடல்மொழியிலும், ஊரை எதிர்த்து பேசும் காட்சிகளிலும் தனித்து தெரிகிறார். யதார்த்தமான நடிப்பால் கதாபாத்திரத்திற்கு உயிரூட்டுகி றார். அவரது அம்மாவாக அனுமோல், அப்பாவாக அருவி மதன் தேர்ந்த நடிப்பில் அழுத்தம் சேர்க்கின்றனர். சிங்கம் புலி, லிங்கா, வில்லன் கதாபாத்திரத்தில் ஸ்கோர் செய்ய, அவர்களை ஓவர் டேக் செய்து கவனிக்க வைக் கிறார் டி.எஸ்.ஆர் தர்மராஜ்.

தனது தொடக்க இசை யிலிருந்தே ரேவா கவர் கிறார். பரந்துவிரிந்த நிலப் பரப்பையும், அச்சுபிச காத அதன் சாயலை ஆன்மா குறையாமல் காட்சிப்படுத்தியிருக்கும் விதத்தில் ராம்ஜியின் ஒளிப்பதிவு கவனிக்க வைக்கிறது.



அழுத்தமான பிரச்சி னையை மையப்படுத்தி நகரும் இந்தத் தொடர், ஒரு கட்டத்தில் ஹீரோ யிச தன்மைக்குள் அடை படும் எண்ணத்தை கொடுத்துவிடுகிறது. மொத்த ஊரையும், அங் கிருக்கும் பெண்களின் எழுச்சிக்கும் காரணமா கும் தமிழ்ச்செல்வி கதா பாத்திர சித்தரிப்பு மீட்பர் வகையறா அல்லது ஹீரோ யிசத்துக்குள் சுருங்கிவிடு கிறது. அவருடன் மற் றொரு பெண்ணும் குரல் எழுப்புவதாக காட்டப் பட்டிருக்கும் காட்சியிலும் கூட, அவரையும் தமிழ்ச் செல்வியே இயக்கியிருப்பார்.

மொத்தமாகவே தமிழ் செல்வி எனும் ஒரு கதாபாத்திரம் பெற்றுத்தரும் விடுதலையாக தொடர் நிலைத்துவிடுகிறது. சோகத்தை பிழியும் வண்ணம் அமைக்கப்பட்டிருக்கும் காட்சிகளின் தொடர் அணிவகுப்பு அயற்சியை ஏற்படுத் தாமலில்லை.

எடுத்துக்கொண்ட கருவுக்கு நியாயம் சேர்க்கும் வகை யில் சமரசமின்றி உருவாகியிருக்கும் இப்படைப்பு அனை வரும் பார்க்கக்கூடியது.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.01.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781